
24.
-3 AUG 1939
DR

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கஉ. } திட்டை பிரமாதி—ஆடி 1939—ஆகஸ்ட்—1௳ { திங்கள் கஉ.


| எண். | உள்ளுறை. | பக்கம். |
|---|---|---|
| 1. | அதிகாரவன்மையும் ஆலயம் புகுத்தலும் ... | 277 |
| 2. | வனபர்வத்தர் சில விஷயங்கள் ... | 281 |
| 3. | கொடிக்காயர் ... | 284 |
| 4. | செந்தமிழ்ப்பாடல்கள் ... | 290 |
| 5. | தீண்டாதார் ஆலயப்பிரவேச கண்டனம் ... | 295 |
| 6 | காந்தீயக் கலகம் ... | 297 |
| 7. | சென்னை கவர்ன்மெண்டு அறிவிப்பு (சேர்க்கை) | |
| 8. | போதமொழி .... | (17—22) |


ஆசிரியர்:— ராம. த. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:—** சிவசந்நிதித் திருக்குளத்தின் தெற்குவடக்குப் படித்துறைகள் கட்டிமுடிந்து திருக்குளத்திருப்பணி நிறைவேறியது. ஆடி கஉ தண்ணீர் பாய்ச்சி நிரப்பியிருக்கிறது. கோயில் திருமஞ்சனத்துக்கும், குடிதண்ணீருக்கும் உபயோகமாகும். வயல்களில் நாற்றுநடு பாவியும் குருவை நடவாகியும் பயிர்த்தொழில் நடைபெறுகின்றது.

உணவுப்பொருள்கள் விலை மலிவாகக்கிடைக்கவில்லை. காரணம், குடியானத்தெருவிலும், பள்ளச்சேரி பறைச்சேரிகளிலும் அங்கங்கே நாட்டாண்மைக்காரராயுள்ளவர்கள் வியாபாரிகளுக்கு விற்பனைவரி விதித்து வாங்கும் நிர்ப்பந்தமேயாகும். இவ்வநீதியை உள்ளூர் பஞ்சாயத்துப்போர்டாராவது மேலதிகாரிகளாவது கண்டித்து ஒழித்தல்வேண்டும்.

புறம்போக்குக் குளங்களின் பாசி வருமானங்களை பஞ்சாயத்துப் போர்ட்டார் சரியானபடி கவனித்து வரப்பற்றவேண்டும்.

**பலவான்குடி:—** திருவாசகபாடசாலையில் ஆனியுத்தரநாளில் இரண்டாவது குருமூர்த்தியாகிய ஸ்ரீ சிதம்பரசுவாமிகளின் குருபூசையும், ஆடி அஉ சுவாதிநாள் சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசையும் நடைபெற்றன.

கிராமஹெட்மேன் லஞ்சம் வாங்கினதாக ஊரில் பரபரப்பு உண்டாயிருப்பதாகத் தெரிகிறது. அது அவ் ஹெட்மேனுக்குப் புதிய செயலல்ல. பரம்பரையாகவுள்ள பழக்க வழக்கமே. அவ்வித நெடுங்காலப் பழக்கவழக்கத்தை அறவேயொழிக்க வேண்டுமானால் காரைக்குடியில் லஞ்ச ஒழிப்புச் சங்கத்தாருக்குத் தெரிவித்து அவர்களை அழைத்துவந்து ஊரில் ஒவ்வொரு வீட்டாரும் லஞ்சம் கொடுத்த விவரங்களை ஒன்றும் ஒளியாமல் சொன்னால் ஆவனசெய்வார்கள்.

**சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான்பெருமாள் நாயனார் திருநட்சத்திரவிழா:—**

**திருவஞ்சைக்களம்:—** கொச்சி - திருவஞ்சைக்களத்தில் கொச்சி மகாராசா அவர்கள் உத்தரவினால் நான்கு ஆண்டுகளாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயமுத்தூர் சேக்கிழார் திருக்கூட்டத்தார்கள் வழக்கம்போல் மா அபிஷேகம், மா அலங்காரம், மா நைவேத்திய மாதீபாராதனை மாகேசுவரபூஜை முதலிய வழிபாடுகள்செய்து திருவஞ்சைக்கள தேவாரப் பதிகங்களும், சேரமானது திருமுறைகளும், சேக்கிழார் தேவாரப்பள்ளிக்கூட மாணவர்களால் தேவாரபாராயணத்துடன் திருவீதி வலமும் புராணபடனமும் செய்து இவ்வாண்டு ஆடி அஉ னிநன்றாக நடாத்தினர்.

**காரைக்குடி:—** நாகநாதபுரம் சிவாலயத்தில் பிருகந்நாயகி சமேத நாகநாத சுவாமிக்கு ஆனி ககஉ தொடங்கி பத்துநாட்களும் சீரும் சிறப்புமாகத் திருவிழா நிறைவேறியது. தேவாரத் திருக்கூட்டத்தாரால் திருமுறைப் பாராயணமும், ஆறாந்திருநாளன்று சுந்தர ஓதுவார் மூர்த்திகளால் வள்ளி திருமணம் தத்துவார்த்த விளக்கத்துடனும், புஷ்பப் பல்லக்குக் காட்சியும் நன்கு நடைபெற்றன. ஆரிய வேத, தமிழ்வேத பாடசாலைகள் நிறுவிச் சீரிய முறையில் நடாத்திவரும் சிவநேசப் பெருஞ்செல்வர், பழ. செ. மு. முத்துக்கருப்பன்செட்டியாரவர்கள் வழக்கம்போல் திருமுறைப் பாராயணத்தை நடாத்தித் திருவிழாவை சிறப்புறச்செய்ததும், திருவிழாவுக்குவந்த சைவவேளாளர், தனவணிகநகரத்தார் முதலானவர்களுக்குத் தேவாரபாடசாலையில் உணவருத்திப்பசிதீர்த்தும் சிறப்புறச் செய்தார்கள். அவர்கட்கு எல்லாநலனும் இறைவர் அருளுவாராக.

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

திருத்தென்குடித்திட்டை

# "சிவநேசன்"

## பன்னிரண்டாம் ஆண்டுத் தொகுதி.

வெகுதானிய ஆவணி முதல்—பிரமாதி ஆடிவரை.

திருத்தென்குடித்திட்டை
"சிவநேசன்" அச்சியந்திரசாலையில்,
பத்திராதிபர்,
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால்
அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

1939.

சென்னைப் பதிவு எண் 3843.

உ

சிவமயம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்குக.

"சிவநேசன்"

# பன்னிரண்டாவதாண்டின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதிய திருவாளர்கள். | பக்கம். |
|---|---|---|
| அதிகாரவன்மையும் ஆலயம் புகுத்தலும் | பத்திராதிபர் | 277 |
| அநாதியாயுள்ள ஆணவமலம் | ... ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் | 129 |
| அபிமானவிசேடம் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 105 |
| அருண்மழையும் சிவபோகமும் | ... அ. முத்தையப்பிள்ளை | 69 |
| அர்ச்சுனன் பாசுபதம் பெற்றது | ... காழி, பி. அகோரம் பிள்ளை | 190 |
| அறிவிப்பு | ...சென்னை கவர்ண்மெண்டு-சேர்க்கை | |
| அறுபதாண்டு நிறைவு விழா | ... 'சிவநேசன்' இராமசாமி | 56 |
| அறுபதாண்டுநிறைவு விழாவாழ்த்து | ... ராம. கு. ராம. இராமசாமி | 60 |
| அறுபதாண்டு நிறைவும் பொற்கிழிப் பரிசும் | பத்திராதிபர் | 75 |
| அற்புதப் பத்திரிகை | சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் | 159 |
| அன்பும் சிவமும் | ... அ. முத்தையப்பிள்ளை | 181 |
| அன்புரிமைக் கடிதம் | ... அ. ப. சி. மு. சின்னைய செட்டியார் | 157 |
| ஆணவமலம் | ... ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் | 79 |
| ஆணவமலம் எழுகுணங்களினாலும் உயிர்களை வேதனை செய்யும் | ,, | 163 |
| ஆணவமலத்துக்கும் மாயாமலத்துக்குமுள்ள வேறுபாடு | ,, | 73 |
| ஆணவமலமே இருவினைகட்கும் நிமித்தகாரணம் | ,, | 153 |
| ஆணவமலமுள்ளபோதே மாயை கன்மங்களுமுண்டு | ,, | 240 |
| ஆதித்தியாந்தர்யாமி சிவபெருமான் | ... ச. குமாரசுவாமிக்குருக்கள் | 49 |
| ஆலயம் | ... இந்துசாதனம் | 12 |
| ஆலயப்பிரவேச அவர்ண சவர்ண விவகாரம் | காழி, பி. அகோரம் பிள்ளை | 143 |
| ஆன்மாவின் வேறாக ஒருபரமான்மா இல்லையென்பவர்கட்குஎன்செ[illegible] | ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 51 |
| இல்லிகவாப் பருவம் | [illegible]னதேசிகர் | 235 |





| | | |
|---|---|---|
| உபசாரப்பத்திரங்கள் | சென்னை நகரத்தமிழ்ப்புலவர் சங்கத்தினர் | |
| உயர்ந்தோர்கூறும் உறுதிமொழிகள் | .. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் | 63, 15[illegible] |
| உயிரிரக்கமும் உயர்ந்தோருள்ளமும் | ... பொ. இராமகிருஷ்ணன் | 203 |
| கடவுளை அடையும் வழிகள் | ... இந்துசாதனம் | 10 |
| கந்தனை வந்தனை செய்வோம் | ... பத்திராதிபர் | 53 |
| கயையும் காமமும் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 5 |
| கருடன் விஷ்ணுவுக்கு ஊர்தியும் கொடியும் ஆன கதை | தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 37 |
| காந்திஜிக்கு ஒரு விண்ணப்பம் | ... ,, | 61 |
| காந்தீயக்கலகம் | ... பத்திராதிபர் | 297 |
| காமகோட்டம் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 257 |
| கார்த்திகைத்தீபம் | ... நா. சிவபாதசுந்தரம் | 121 |
| கொடுந்தாயர் | ... ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 284 |
| சக்தி | ... இந்துசாதனம் | 9 |
| சமணச்சைவர் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 6 |
| சமயச்சின்னங்கள் | ... இந்துசாதனம் | 77 |
| சமயச்சட்டமும் சர்க்கார்சட்டமும் | ... காழி, பி. அகோரம்பிள்ளை | 101 |
| சமயாபிமானம் | ... ஒரு சமயாபிமானி | 187 |
| சற்சூத்திரர் | ... ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 106 |
| சால்வயுத்தம் | ... காழி, பி. அகோரம்பிள்ளை | 189 |
| சிவஞானபோதநூல் | ... ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 64 |
| சிவஞானபோதநூல் | ... ச. குமாரசுவாமிக்குருக்கள் | 205 |
| சிவலிங்கபூசை | ... அ. முத்தையப்பிள்ளை | 45 |
| செங்குட்டுவன் தமிழ்மொழிப்பற்றும் தாய்நாட்டுப்பற்றும் | ச. உலகநாதன் | 241 |
| செந்தமிழ்ப் பாடல்கள் | ...ந. மு. வேங்கடசாமிநாட்டார் | 290 |
| சைவசமயம் | ... கொம்பரேச்வர சிவாசாரியார் | 249 |
| சைவசித்தாந்த மகாசமாஜ வரவேற்புரை | C.K. சுப்பிரமணியமுதலியார் | 261 |
| தக்ஷயாகம் | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 57 |
| ததீசிப்பிரபாவம் | ... காழி, பி. அகோரம்பிள்ளை | 234 |
| தமிழகராதி | ராவ்சாகேப் S. வையாபுரிப்பிள்ளை | 93 |
| தமிழ் எழுதுவோரிடம் காணப்படும் சிலபிழைகள் | N.J.வேதநாயகம் | 131 |
| தலைமைப்பேருரை | கா. சுப்பிரமணியபிள்ளை M. A. M.L. | 110 |



7 AUG 1939
186977
186977

| | | |
|---|---|---|
| திரிமூர்த்தி அபேத சமர்த்தனம் | ... ஸ்ரீசங்கராசார்யசுவாமிகள் | 18 |
| திருக்கல்யாண உண்மை விளக்கம் | .. ந. சிவகுருநாதபிள்ளை | 155 |
| திருக்கைலாயகிரி யாத்திரை | ... பத்திராதிபர் | 160 |
| திருநாவுக்கரசர்சரித சினிமா | ... தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 40 |
| திருப்பணி வாழ்த்து | ... இராம. கோவிந்தசாமிபிள்ளை | 253 |
| திருமால் அல்லது மகாவிஷ்ணு | ... இந்துசாதனம் | 26 |
| திருவுருவம் | ... ,, | 14 |
| திருவெம்பாவைப்பூசை | ... ,, | 128 |
| தில்லைவாழந்தணர் புராணம் | ... சி. செல்லையாபிள்ளை | 139 |
| தீண்டாதார் ஆலயப்பிரவேச கண்டனம். | செட்டிநாடு | 295 |
| தேங்காய் தீர்த்தம் | தி. மா. அர்த்தநாரீசுவரக்குருக்கள் | 168 |
| நடராஜர் | ... இந்துசாதனம் | 3 |
| நம்மவர் நாடும் சட்டதிட்டங்கள் | ... பத்திராதிபர் | 161 |
| நம்மை நாமே திருத்துவோம் | ... காழி, பி. அகோரம்பிள்ளை | 173 |
| நல்வரவு வாழ்த்து | ... மணிவாசக சங்கத்தினர் | 225 |
| பகீரதப் பிரயத்தனம் | ... காழி பி. அகோரம் பிள்ளை | 259 |
| பரசுராமன் பாவ நீக்கியது | ... ,, | 233 |
| பலதார மணம் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 33 |
| பழக்க வழக்கம் | ... இ. வரதராஜன் | 178 |
| பார்ப்பனரும் சைவமும் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 169 |
| பாலைப்பழம் | — உ. வே. சாமிநாதையர் | 29 |
| பிரார்த்தனை | ... ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் | 152 |
| பிறந்தநாட் கொண்டாட்டம் | ... பத்திராதிபர் | 197 |
| பிறப்புஞ் சிறப்பும் | ... ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 7 |
| புதுவருட வாழ்த்து | ... தி. கோ. பஞ்சாபகேசன் | 201 |
| பொங்கல் நன்மொழி | ... த. உலகநாதன் | 137 |
| மகிடாசுர சம்மாரம் | ... இந்துசாதனம் | 99 |
| மகேசன் அல்லது பரமேசுவரன் | .... ,, | 25 |
| மங்களத்தின் அடிப்படை | ... R. வேங்கடநாராயண சர்மா | 151 |
| மணி ஐயர் | ... உ. வே. சாமிநாதையர் | 65, 89 |
| மணிவாசக சங்கம் | ... பத்திராதிபர் | 227 |
| மணிவாசக சங்கத்தின் 29-வது ஆண்டுத் திருவிழா அழைப்பு | மணிவாசக சங்கத்தினர் | 200 |
| மணிவாசக சங்கத்தின் 29-வது ஆண்டின் அறிக்கைப்பத்திரம் | ,, | 217 |
| மதிப்புரைமஞ்சரி—பத்திராதிபர் | | 20, 43,55, 136, 158, 202, 231, 248 |





| | | |
|---|---|---|
| மனையாளிறந்தால் புருஷனே தக ஞாதி கருமங்கள் செய்ய வேண்டும் | ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள் | 51 |
| மனைவியரின் குறைநிறை | ... சுபூகேசரி | 165 |
| மாணிக்கவாசகர் | ... யதார்த்தவசனி | 274 |
| மாண்டூக்ய உபநிஷத் | ... ஸ்ரீசங்கராசார்யசுவாமிகள் | 17 |
| மாதொருபாகனும் மற்றைத் தெய்வங்களும் | ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 82 |
| மார்க்கண்டேயர் | — காழி, பி. அகோரம்பிள்ளை | 260 |
| முற்கால தற்காலக் கல்விமுறை. | பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியார் | 125 |
| மூலதனம் | — பத்திராதிபர் | 1 |
| மெய்கண்டாரும் சிவஞானபோதமும் | மு. சா. சிவராம பிள்ளை | 48 |
| வைபர்வத்துச்சிலவிஷயங்கள் | — காழி, பி. அகோரம் பிள்ளை | 286 |
| வாழ்த்துரை | — ஏகாம்பரேசுவர சிவாசாரியார் | 251 |
| விநாயகர் | — இந்துசாதனம் | 2 |
| விபூதி மகிமை | — காழி, பி. அகோரம் பிள்ளை | 233 |
| வியாகரணம் | — ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை | 85 |
| வியாசர் சுகரைப்பெற்றது | — ,, | 83 |
| வியாசருக்குச் சிவாநுக்கிரகம் | — ,, | 84 |
| வேர்ஞதலரும் ஹிந்துவும் | — ,, | 5 |
| வேதச் செய்யுள் | — ந. கனகராஜையர் | 245 |
| வேதமும் ஆகமமும் | — க. பிச்சாடனக் குருக்கள் | 254 |
| விருஷபம் சிவபிரானுக்கு ஊர்தியும் கொடியும் ஆனகதை | தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 37 |
| ஜீவகாருண்ணியம் | — சிவதொண்டன் | 133 |
| ஜ்வரசரிதம் | — தி. மா. ஸ்ரீநிவாசையங்கார் | 38 |
| ஷிந்துவும் ஹிந்துவும் | — ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 81 |
| ஹிந்துஜனுபிவிர்த்தி | — காழி, பி. அகோரம் பிள்ளை | 124 |
| சுலோக பஞ்சக விஷயம் | ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை | 1-20 |
| சுலோக பஞ்சகவிஷயம்-முகப்பு முன்னுரை முதலியன | | 1-8 |
| ஸ்ரீ காசியாத்திரை விளக்கம்—சபாபதி சுவாமி. | | 37—60 |
| ஷை முகப்பு உரிமையுரை முதலியன | | 1—8 |
| பொது மொழி | | 1—22. |


---

## சிவநேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும்
# வரைந்தளித்த திருவாளர்கள்.

பக்கம்.


1. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தமிழாசிரியர், சித்தாந்த வித்தியாசாலை, திருத்தென்குடித்திட்டை. 21
2. பா. அ. முருகேச முதலியார், கஞ்சிபுரம். ,,
3. A. முத்தையப்பிள்ளை கஞ்சிபுரம். ,,
4. K. A. ஆதிமூலம், T. S. பச்சையப்பன், பாரதகவி மாணவர் கழகம், திருவத்திபுரம். 22
5. அ. இராஜம்பிள்ளை, பிரசங்கமணி, புதூர்ச்சங்கம். ,,
6. தே. பெரியசாமிபிள்ளை, திருவாவடுதுறையாதீனவித்துவான், உறையூர், திருச்சி. 23
7. ச. குமாரசுவாமிக் குருக்கள், யாழ்ப்பாணம். ,,
8. சிவசூரியநாராயணபிள்ளை, பஞ்சாங்கக்கணிதர், இட்டமொழி. ,,
9. சேதுபதி. நடேசசெட்டியார், சின்னக்காஞ்சிபுரம். 24
10. பா. நீலகண்டசித்தாந்தியார், சென்னை. 40
11. ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள், கதாமலை. 41
12. பண்டித, அ. கோபாலையர், ஆலங்குடி. ,,
13. வ. மு. இரத்தினேசுவரையர், தமிழ்ப்பண்டிதர், கம்பை. 42
14. மு. முத்தப்பிள்ளைஎன்கிறசஷ்டிசுவாமிகள், பரிமணக்குடி. 54
15. வி. சாமிநாதபிள்ளை, தமிழ்ப்பண்டிதர், போளூர். ,,
16. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தமிழாசிரியர், சித்தாந்த வித்தியாசாலை, திருத்தென்குடித்திட்டை. ,,
17. S. சுவாமிநாதச்செட்டியார், தமிழ்ச்சங்கக் காரியதரிசி, கும்பகோணம். 55
18. ராம. ஊ. ராம. இராமசாமி செட்டியார், காரைக்குடி. 135
19. கோ. வில்வபதி, த. ஏலகநாதன். பாரதகவி மாணவர் கழகம், திருவத்திபுரம். 138
20. தே. பெரியசாமிபிள்ளை, திருவாவடுதுறை ஆதின வித்துவான், திரிசிரபுரம். 201
21. ச. நா. குமரகுரு, மணவை. 229
22. இராம. கோவிந்தசாமிபிள்ளை, தமிழாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு. 253




## சென்னை கவர்ன்மெண்ட் விளம்பரம்.

### ரெவின்யு டிபார்ட்மெண்ட்.

*சமாசாரப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் 63-ம் நெ. அறிக்கை.*

போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ், 1939-ம்வருஷம் ஜூலை மீ 21உ.

(சென்னபட்டணம் 1939-ம்வருஷத்து 8-வது ஆக்டாகிய) புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைசென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்ட் செலாவணியாகத் தொடங்குவது.

சமாசாரப்பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அடியிற்கண்ட அறிக்கையானது விளம்பர மந்திரி இலாகாதாரால் வெளியிடப்பட்டிருக்கிறது:-

1. புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைசென்ஸ் கொடுப்பதையும்) குறித்த சென்னப்பட்டணத்து ஆக்ட் என்னும் சட்டமானது 1939-ம்வருஷம் ஆகஸ்ட்மீ 1உ யன்றும் அந்தத்தேதியிலிருந்தும் செலாவணியாகத் தொடங்குமென்று அறிக்கை யிடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி யாதொரு நபர் லைசென்ஸ் கொடுக்கும் உத்தியோகஸ்தரிடமிருந்து இது காரியத்துக்காகத் தாம் ஒரு லைஸென்ஸ் பெற்றிருந்தாலொழிய எந்த ரூபத்திலாகிலுமுள்ள புகையிலையை மொத்தமாய் விற்பனை செய்யவுங்கூடாது, மொத்த வியாபாரியாகவோ தயார் செய்பவராகவோ கமிஷன் ஏஜெண்டாகவோ புகையிலையில் தொழில் நடத்தவுங்கூடாது. அதேமாதிரியாக, ஸிகார், சுருட்டு, ஸிகரெட், ஸிகரெட் புகையிலை, சுங்கான்புகையிலை, பீடி, பொடி, முதலிய தயார்செய்யப்பட்ட புகையிலையை யாதொரு கடையிலாகிலும் தெருக்களில் விலைகூறித்திரிந்தாலாகிலும் சில்லறையில் விற்பனை செய்வதற்கு ஒரு லைசென்ஸ் வேண்டியிருக்கிறது. மெல்லுவதற்கான புகையிலையை சில்லறையில் விற்பனை செய்வதற்கு லைசென்ஸ் ஏதுவும் வேண்டியதில்லை. எந்த நபராகிலும் 1939-ம்வருஷம் ஆகஸ்ட்மீ 1உ யன்றும் அந்தத் தேதியிலிருந்தும் யாதொரு லைஸென்ஸில்லாமல் மேலே சொன்னபடி புகையிலையில் வியாபாரம் செய்தால், அவர்மேல் பிராது தொடரப்படும்.

2. வியாபாரிகள் தங்களுக்கு வேண்டிய லைசென்சுகளுக்காக விண்ணப்பம் செய்துகொண்டு அவைகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கொஞ்சகாலம் பிடிக்குமாகையால், வியாபாரிகளுக்கு அசௌகரியம் நேரிடாமலிருக்கும் பொருட்டு அடியிற்கண்ட விதிகள் வெளியிடப்படுகின்றன. இந்த விதிகளை அனுசரித்து நடப்பவர்கள்மேல் லைசென்சில்லாமல்புகையிலையில் வியாபாரம் செய்வதற்காக பிராது தொடரப்படமாட்டாது.

3. **விதிகள்:-1939ம்வருஷம் ஆகஸ்ட்மீ 1உயன்றும்அந்தத்தேதியிலிருந்தும்**எந்தரூபத்திலாகிலுமுள்ள புகையிலையைமொத்தமாய் விற்பனைசெய்பவராவது, மொத்தவியாபாரியாகவாயினும் தயார்செய்பவராகவாயினும் கமிஷன் ஏஜண்டாகவாயினும் புகையிலையில்தொழில் நடத்தவாவது விரும்புகிறவர்கள் எல்லோரும்தாங்கள் அந்தப்படிச்செய்ய உத்தேசித்திருப்பதைஇதனுடன் சேர்ந்துள்ள அறிவிப்பு நமூனாப்படி உடனே தெரிவிக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள் இந்த நமூனாவைக் கையால் எழுதித் தயாரிக்கலாம். எந்தத் தாலூகாவில் விண்ணப்பதாரர் தொழில் நடத்தும் இடம் அல்லது இடங்கள் இருக்கின்றனவோ அல்லது விலைகூறித் திரிபவர் ஒருவர் விஷ

யத்தில் அவர் எந்த தாலூகாவில் சாதாரணமாய் வாசஞ்செய்கிறாரோ அந்த தாலூகாவின் தாசில்தார் மேற்பார்த்து அசிஸ்டெண்ட் கமெர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர் என்னும் வியாபாரவரி உதவி உத்தியோகஸ்தருக்குக் கொடுக்க வேண்டுமென்று மேல்விலாசம் எழுதி டை நமூனாவை அனுப்பவேண்டும்.

4. மேற்சொன்ன அறிவிப்பைக் கொடுத்திருப்பவர்கள் எல்லோருக்கும் வியாபாரவரி சம்பந்தமான ஜெப்பந்தியைச் சேர்ந்தவர்கள் அச்சிட்ட விண்ணப்ப நமூனாக்களைக் கொடுப்பார்கள். டை விண்ணப்ப நமூனாவைக் கிரமமாய்ப் பூர்த்திசெய்து, லைசென்சுக்காக விதிக்கப்படத்தக்க கட்டணம் ஏதேனும் இருந்தால் அந்தக் கட்டணத்தோடுகூட, விண்ணப்பநமூனாவைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து பதினைந்து தினத்துக்குள் அனுப்பவேண்டுமென்று அந்த நபர்களுக்கு உத்தரவு செய்யப்படும். அறிவிப்பு நமூனாவுக்காவது விண்ணப்ப நமூனாவுக்காவது முத்திரை எதுவும் வேண்டியதில்லை.

5. எந்த நபர்களாகிலும் மேற்சொன்ன விதிகளை அனுசரித்து நடக்கத் தவறிப்போயிருந்து டை சட்டத்தில் கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக 1939-ம் ஷ ஆகஸ்ட்மீ 1௳ யன்றும் அந்தத் தேதியிலிருந்தும் லைசென்சில்லாமல் புகையிலையில் வியாபாரம் செய்தால், அவர்கள்மேல் பிராது தொடரப்படுமென்று பொதுஜனங்களுக்குக் கண்டிப்பாய் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

அனுபந்தம்.

அறிவிப்பு நமூனா.

................................................................................ என்னும் நான்

தயார் செய்யப்பட்ட புகையிலையில் மொத்தவியாபாரம் செய்பவராக அல்லது

தயார் செய்யப்பட்ட புகையிலையல்லாத இதர புகையிலையில் மொத்த வியாபாரம் செய்பவராக, அல்லது

தயார் செய்பவராக, அல்லது

தரகராக அல்லது கமிஷன் ஏஜெண்டாக, அல்லது

சில்லறை வியாபாரியாக, அல்லது

தெருக்களில் விலைகூறித் திரிபவராக

லைசென்ஸ் கொடுக்கப்பெற விரும்புகிறேன்.

(மேற்கண்ட பாகத்துக்களில் எது பிரயோகப்படத்தக்கதாயிருக்கிறதோ அதை அமைத்துக்கொள்ளவும்.)

ஒரு லைசென்ஸுக்காக விண்ணப்பித்துக்கொள்ளவும். அதற்காக விதிக்கப்படத்தக்ககட்டணத்தைவிண்ணப்பநமூனாவந்துசேர்ந்ததிலிருந்து பதினைந்து தினத்துக்குள் செலுத்தவும், விதிக்கப்படக்கூடிய யாதொரு மொத்த விற்பனை வரியை கிரமமான தேதியில் செலுத்தவும் நான் உடன்படுகிறேன்.

நான் தொழில் நடத்தும் இடம்.................................................ல்
இருக்கிறது; நான் சாதாரணமாய்.................................................ல்
வாசம் செய்கிறேன்.                    கையொப்பம்.....................

டி. ஜி. ஹோல்ட்ஸ்வொர்த், கவர்ன்மெண்ட் செக்ரெடரி.

---



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு ௧௨. } பிரமாதி—ஆடி. 1939—ஆகஸ்ட்—1௳ { திங்கள் ௧௨.

உடையா னரன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ளீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## அதிகார வன்மையும் ஆலயம் புகுத்தலும்.

உலகு ஆள் அரசர் ஒருவர். அவர் ஆளுகைக்கு உட்பட்ட அனைவரும் அவருடைய குடிகள். அப்பேரரசரின்கீழ் அவருக்குப் பிரதிநிதி, மாகாணத்தலைவர், மந்திரி, பிரதானி ஆகிய அதிகாரவர்க்கத்தினரும், சிற்றரசர்களும், குடிபடைகளும் படிப்படியாக அமைந்திருப்பர். அவரவரும் தத்தமக்குரிய அதிகார எல்லையினின்று தத்தங்கருமங்களை ஆற்ற வேண்டும் என்ற சட்ட திட்டங்களும் உண்டு. அதிகார வரம்பை மீறின் அரச தண்டனைக்குள்ளாவர்.

அங்ஙனமே, 'விண்ணோருந்தேவர்க்கும் மேலான வேதியராய் மண்ணோரும் மன்னவர்க்கும் மாண்பாகி' நின்று எல்லாவுலகங்களையும் இயக்கும் பேரிறைவர் ஒருவர். எல்லாச் சீவரும் அவருக்கு மீளா அடிமைகள். அவரது ஆணை வழியே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் முதன்மையரும், மற்றும் பல அதிகார வர்க்கத்தினரும் உளர். அவர்கள் பேரிறைவர் அருளிய வேதாகமாதி சட்ட திட்டங்களை உடன்பாடாகக்கொண்டு தத்தங் கருமங்களைத் தங்கள் தங்கள் அதிகாரவரம்பில் நின்று ஆற்றுவர். மீறின் தெய்வதண்டனைக்குள்ளாவர்.

அரசருக்கு அணுக்கத் தொண்டராய் இருப்பவர் மாத்திரம் அரசரது அண்மையில் நெருங்கிக் கருமம் ஆற்றுதல் போல இறைவருக்கும் அணுக்கத்தொண்டராயுள்ளவர்களே அண்மையில் அணுகி உரிய தொண்டாற்றுவர். இன்னவின்ன அதிகாரிகள் இன்னவின்ன இடங்களிலிருந்து இன்னவின்ன காலங்களில் இன்னவின்ன கருமங்களைப்புரிதல்வேண்டும் என்றவிதி

உலக வியலினும், தெய்வவியலினும் வகுக்கப்பெற்றுள்ளன. அரசர் தங் குடிகளுக்கெல்லாம் தலைவராயிருந்து தமது குடிகளைப் பாரபக்ஷமின்றிப் பாதுகாக்கினும் அவரவர்களின் அறிவு, குணம், செயல் ஆகியவைகளுக்கு ஏற்றவாறு அவரவர்களை வரையறைசெய்து அந்தந்த இடங்களில் அவர்களை அமர்த்திப் பாதுகாத்தல்போலவே இறைவரும் தமது அடிமைகளாகிய சீவர்களின் பக்குவாபக்குவங்களுக்குத் தக்கதனு, கரண, புவன, போகங்களைத் தந்து தத்தங்கருமங்களில் வழுவாது ஒழுகிவரக் கட்டளையிட்டிருக்கின்றார். பக்குவாபக்குவம் எவரானும் மறுத்தற்கியலாதன. தெய்வபேதங்களும், சமயபேதங்களும், சாதிபேதங்களும், மொழிவேற்றுமைகளும், தொழில் வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளும் உலகில் தொன்மையாகவமைந்துள்ளனவே. அவைகளை அபேதமாக்குவதென்றால் புதிய ஒருஉலகையும்கடவுளையும் உண்டாக்குவதை யொக்கும். எல்லாச் சீவர்களையும் எல்லாப் பொருள்களையும் விருப்பு வெறுப்பின்றிப்பரந்த நோக்குடன் பார்ப்பதே சமத்துவமாகுமன்றி கீழை மேலாக்கி மேலைக் கீழாக்கிச் சமப்படுத்துவதென்பது மடமை.

அறிவு, குணம், செயல்களிற் பேதமிருப்பது போல ஈசர் முதல் நீசர்வரை பலசாதி பேதங்களும்நால்வகைத்தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதங்களும் யானை முதல் எறும்பீறாகவுள்ள பலவுருவபேதங்களும் இருப்பன இயற்கையே. இப்பேதங்களை எவரானும் மாற்றவியலுமா? இயலாதே. அவைகளெல்லாவற்றுள்ளும் இறைவன் உறைகின்றான் என்பதுகொண்டு விருப்புவெறுப்பின்றி நோக்குதலன்றோ அறிஞர்களின் கடமை.

உலகியலில் சாதி சமயம் பெரியவர் சிறியவர் கற்றவர் கல்லாதவர் நல்லவர் கெட்டவர் என்ற ஏற்றத்தாழ்வுகளும், அரசியலில் உத்தியோகமுறையிலும் பட்டம் பதவிகளிலும் உயர்வு தாழ்வுகளும் இருப்பனபோன்று தெய்வசாம்ராஜ்ஜியத்திலும் பதமுத்தி பரமுத்தியென்ற இருவகைகளும் பலபாகுபாடுகளும் உள்ளன.

இப்பரதகண்டமாகிய புண்ணிய பூமியின்கண்ணே சைவ, வைணவ ஆலயங்களும், விநாயகர், சுப்பிரமணியர் ஆலயங்களும், மஹா சாத்தா, துர்க்காதேவியாலயங்களும், சிறுதெய்வ ஆலயங்களும் அமைத்து அவரவர் சாதி சமய அறிவு ஒழுக்கங்களுக்கேற்ப வழிபாடு செய்யுமுறை என்றுமிருந்துவருகிறது.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைச் சாதியினரும் சவர்ணர் எனவும், பஞ்சமர்கள் அவர்ணர்எனவும் பகரப்பெறுவர்.

சிவாலயாதி திருக்கோயில்களில் கர்ப்பக்கிருகம்வரை - அர்ச்சகரும், அர்த்தமண்டபம் வரை - அந்தணரும், மகாமண்டபம் வரை - அரசர், வணிகர், வேளாளரும் உட்புகுந்தும், அவர்ணர்கள் கோபுரத்திற்கு வெளியே நின்றும் தெய்வவழிபாடு செய்யலாமென்பது விதி.

சிவாலயாதி திருக்கோயில்களில்சவர்ணர்களும் சிறு தெய்வக்கோயில்களில் அவர்ணர்களுமே உட்புகுந்து வழிபடுவது வழக்கம்.



சவர்ணர்களுள்ளும் பலபிரிவுகளுண்டு. அவர்ணர்களுள்ளும் பள்ளர், வள்ளுவர், பறையர், சக்கிலியர் என்ற பலபகுப்புகளுண்டு. அவர்களுக்கு மயிர் கழிக்கும்மயிர் வினைஞரும், ஆடையொலிக்கும்வண்ணாரும் வேறேயாவர்.

சவர்ணர்கள் சநாதன தர்மத்தைக் கைக்கொண்டவர்கள். சநாதனம் என்றும் அழியாதது. ஆகையால்சநாதன தர்மத்தை சவர்ணர்கள் தம்முயிரினும் விழுமிதா யோம்புவர்.

இன்னோரன்ன காரணங்களினாலேயே மஹாராணியவர்கள் அரியணையமர்ந்து அரசுரிமையேற்றகாலத்தில் இந்தியர்களின் சாதிசமயாசாரங்களில் நடுநிலைவகிக்க இந்தியப் பெரியார்கள் வேண்டிக்கொள்ளவும் அவ்வாறே மஹாராணியவர்கள் உடன்படவும் ஆயிற்று.

“‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்றதனால் சாதிபேதம் இடையில் வந்தது. திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆகியவர்கள் ஆலயத்துள்வரவேற்கப்பட்டனர்” என்றெல்லாம் தங்களுக்கிசைந்தவாறுபேசி அபேதங்காட்டவருவாரும் உளராயினர். ஒருவனே தெய்வமென்பது அழிவில்லாத பரம்பொருளையும் ‘ஒன்றே குல’ மென்பது மற்றைச் சீவர்களெல்லாம் அப்பரம்பொருளின் அடிமைக்குடிகள் என்பதையுமே குறிக்கும். ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்ற பெரியார் அருளிய திருமந்திரத்தில் ‘பேர்கொண்ட பார்ப்பான்’ என்பது போன்ற சாதிபேதங்கள் பரக்கக் கூறியிருக்கின்ற பல செய்யுட்களையும், பெரியபுராணத்தில் திருநாளைப்போவார் ‘இன்னல் தரும் இழிபிறவி இது தடையென்றே துயில்வார்’ என வரும் செய்யுளையும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநீலகண்ட யாழ்ப்பாணரை‘கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்துத்தேயுமிசையாழுங்கள் இறைவருக்கிங் கியற்றுமென’ச் சட்டளையிட்ட செய்யுளையும், வேதாகமசாஸ்திர புராண இதிகாசங்களிலும், தேவார திருவாசகாதி திருமுறைகளிலும், சித்தாந்த நூல்களிலும், பொது நூல், விதி நூல்,சங்க நூல் ஆகியபல நூல்களிலும்இன்னோரன்ன பல பாக்களையும் கண்ணுறலாமே. முழுப்பூசணிக்காயை வட்டில் சோற்றில் மறைத்து உலகையேமாற்றமுடியுமா?

உலகம் போற்றும் உத்தமர் என்னும் காந்தி ‘ஹரிஜன்’ என்னும் பறைப் பத்திரிகையைக்கொண்டு சாதிசமயாசாரங்களைப் பாழ்படுத்தப் பறைசாற்றுகின்றார். கலகக் களஞ்சியமாகிய அவர் ஆலயநிந்தகர். அரசாங்க சட்டமறுப்பு, பட்ட மறுப்பு, பதவி மறுப்பு இயக்கங்கள் செய்த அவர் மகாத்மாப் பட்டமும் பெற்றிருக்கிறார். அவரது தாசர்கள் அரசாங்கப்பதவிகளைக் கைக்கொண்டு அதிகாரவன்மையால் ஆலய விரோதமான செயல்களுக்கு உதவி புரிகின்றார்கள்; ஆலயநுழைவுக்கு அதிகாரிகளல்லாதவர்களை ஆலயத்துட் புகுத்துவோருக்கும் புக்கபேருக்கும் சலுகைகாட்டுகின்றார்கள்; புதிய சட்டங்கள் போடுகின்றார்கள்.

இவ்வாறு செய்வன தவிர்வன கருதாது, தக்கவின்ன தகாதனவின்னவென்று ஒக்க உன்னுதவர்களாய் அவர்ணர்களைச் சவர்ணர்களுக்குரிய ஆலயங்களில் புகுத்தித் திருக்கோயில் இழிவு செய்ய உதவிபுரியுந் துராகிருதமாகிய அந்நுழைவைத் தடுக்க வழக்குத் தொடர்வோரைத்

தடுக்க அவசர அவசரமாகச் சட்டமாக்குவதும் தருமமா? சரியான நீதியா? நடுநிலையா? ஒரு பாற்கோடல் அரசுரிமைக் கடுக்குமா?

அவர்ணர்களுக்குப் பரிந்து பாடுபடுபவர்கள்போல நடித்துச் சலுகை காட்டுவதெல்லாம் சமரசஞானத்தினலா? தமபயன்கருதியா? என்று நன்கு ஆராயவேண்டும். இந்திய மக்களுக்கு வேருக ஆங்கில மக்களை சகலனத்தி மக்களாகப் பாவித்து விடுதலைப்போர் நடத்துபவர்கள் சமரசஞானிக ளாகார். பதவி மறுப்புச்செய்து ஒருபயனுங் காணுதவர்கள் பதவிபெற்றுப் பயன்கண்டதால் தங்கள் பதவிகளின் எல்லைநாள் முடிந்த பிறகும் பதவி வேட்டைக்கு ஓட்டெடுப்பதற்கு (வாக்குரிமைபெற) அவர்ணர் கூட்டம் அடிமைகளாகிச் சாதகம் புரியுமென்னும் தம்பயன் கருதுவதேயாகும்.

சவர்ண அவர்ணச் சேர்க்கையால் சுயாட்சி வரவேவராது. உலகசாம் ராஜ்யத்தைவிரும்பி தெய்வசாம்ராஜ்பத்தை சநாதனதர்மிகள் ஒருபோதும் கைவிடமாட்டார்கள்.

ஆகவே, அரசாங்க அதிகார நிர்வாகிகள் அதிகார வன்மையால் பதவியையும் பணவுதவியையும் விரும்புபவர்களையும், அவர்ணர்களையும் தமராகக் கொண்டு, அவர்ணர்களுக்கு நன்மைசெய்வதுபோலப்பாவனை காட்டுவதன் மூலம்சவர்ணர்களுக்கும் சவர்ணர்களுக்குரியஆலயங்களுக்கும் தீமை புரியாமலும்சும்மாவிருக்கின்ற அவர்ணர்களைத் தூண்டிவிட்டு சவர்ணர்களுக்கும் அவர்ணர்களுக்கும் விரோதமூட்டாமலும் நடுநிலை வகிக்கவேண்டும்.

சவர்ண அவர்ண வியவகாரத்தைச் சாதாரணமாக ஒரு அவசரச்சட்டத்தின்மூலம் தீர்த்துவிடப் பார்ப்பதும், அதிகார வன்மையினல் அவர்ணர்களுக்குத் துணைபுரிந்து அவர்களை ஆலயத்துட்புகுத்தலும் நேரிய முறையாகா. நீதிமீறிப் புகுத்துகின்றவர்களும், புகுகின்றவர்களும் நற்பயனடையார் என்பதும் சநாதனதர்மத்தைக் கடைப்பிடித்தவர்கட்குத் தெய்வம் துணைபுரியுமென்பதும் திண்ணம்.

சாதிசமய ஆசாரங்களில் ஆங்கில அரசு நடுநிலை வகித்தே வந்துள்ளது. அவ்வரசின்கீழ்க் காந்தியக் கொள்கையுடையவர்கள் அதிகாரவர்க்கத்தினராக அமர்ந்து அநீதி புரியலாமா என்றதைப் பாராளுமன்றத்தினரும், மாட்சிமைதங்கிய மன்னர்பெருமானும் கவனித்து ஆவனசெய்யவேண்டுவது இன்றியமையாததாக இருக்கின்றது. மஹாராணியாரவர்கள் சிங்காதனமேறி அரசுரிமை ஏற்றுக்கொள்ளுங்காலத்தில் இந்தியர்களுடைய சாதி சமய ஆசாரங்களில் நடுநிலை கோடாதிருக்க வேண்டிக்கொண்ட இந்தியப் பெரியார்களின் உயரியகருத்துப் பிழைபடாமலும், மஹாராணியாரவர்கள் அவ்வாறே உடன்பட்ட உண்மைவாக்குப் பொய்க்காமலும் காப்பது காவலன் கடமை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

உ

# வனபர்வத்துச் சிலவிஷயங்கள்.

சென்னை கேசரி அச்சுக்கூடத்தின் 1929, 1930, 1931, 1932-ம் வருடங்களின் ஸ்ரீமத், ம. வீ. இராமானுஜாசாரியரின் தமிழ்ப் பதிப்பு.

(சைவத்திருவாளர், காழி, பி. அகோரம்பிள்ளை அவர்கள்.)

'வாஸுதேவர் துக்கத்துடன் தர்மபுத்திரரை நமஸ்கரித்துச் சொல்லலானார்.' பக்கம் 45.

'ஹரியான உர்முடைய நெற்றியிலிருந்து மூன்று கண்ணுள்ளவரும் சூலத்தைக் கையில் தாங்கினவருமான சம்புவானவர் உண்டானார்.' பக்கம் 48.

'கிருஷ்ணருடைய ஆத்மாவான அர்ஜுனன் மஹாத்மாவான அவரைக் குறித்து............' பக்கம் 49.

'எதில் துர்வாஸரிஷியினல் விஷ்ணுவுக்கு வரம் அளிக்கப்பட்டதோ அந்த வரதானமென்கிற தீர்த்தத்தை............' பக்கம் 293.

'விஷ்ணு தேவசத்ருக்களைக் கொன்றபின் சென்று சுத்திசெய்து கொண்டதான சமீதீர்த்தம்.' பக்கம் 294.

'எந்த இடத்தில் யோகேஸ்வரரும் விருஷபத்வஜருமான ஸ்தாணுவானவர் தாமேஸாந்நித்தியம் செய்கிறாரோ அந்தப்பஞ்சவடி'. பக்கம் 313.

'அந்த இடத்தில் (ஸுவர்ணமென்கிற தீர்த்தத்தில்) முற்காலத்தில் விஷ்ணுவானவர் ப்ரசாதத்திற்காக ருத்ரரை ஆராதித்தார்; தேவதைகளாலும் அடையமுடியாத அநேகவரங்களை அடைந்தார். த்ரிபுராரியானவர், விஷ்ணுவைநோக்கி, 'க்ருஷ்ண! நீர் உலகத்தில் எல்லாப்ராணிகளுக்கும் மிக்க அன்புக்குரியவராவீர். உலகமனைத்தும் உம்மைத் தலைவராகக் கொண்டதாகும்' என்று சொல்லினர். பக்கம் 318, 319.

'எந்தத் தீர்த்தத்தில் ராமர் தேகத்தைவிட்டு அந்தத் தீர்த்தத்தின் தேஜஸினல் ஸ்வர்க்கத்தை அடைந்தாரோ ஸரயூநதியைச் சார்ந்த கோப்ரதாரமென்கிற அந்த உத்தம தீர்த்தத்தை......' பக்கம் 323.

''விருஷபத்வஜரை வணங்கி, பஸ்மத்தினல் ஸ்நானம் செய்யவேண்டும். அப்படிப் பஸ்மஸ்நாநம் செய்த பிராம்மணனல் பன்னிரண்டு வர்ஷகாலங்களில் நிறைவேறும் விரதமானது நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாகும். மற்றவர்ணத்தார்களுக்கு எல்லாப் பாவங்களும் நாசமடைகின்றன. பக்கம் 324.

'எங்கே ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் மிக உயர்ந்ததும் மாசற்றதும் ஆத்மாக்களின் உஜ்ஜீவனார்த்தமாக ஏற்படுத்தப்பட்டதும் சிவதனமுமான விஷாண (சிவனுடைய வடிவ) மிருக்கிறதோ அங்கே அதனைத் தரிசித்தால் மனிதன் சிவபுரத்தை அடைவான்.' பக்கம் 347.

'அந்தத் தேவர்கள் எல்லோரும் விஷ்ணுவுடன் பிரம்மதேவரை அடைந்து கை குவித்துக்கொண்டு ஸமுத்திரத்தை நிரப்புவதைப்பற்றிச் சொன்னார்கள்.' பக்கம் 395, 396

'எந்தக் கபிலரை வாசுதேவரென்று சொல்லுகிறார்களோ அவர் அந்த அறுபதினாயிரம் ஸாகரர்களையும் ஒரே சமயத்தில் எரித்தார்.' பக்கம் 401.

'வ்ருஷ்ணிகளான அவர்கள் (கிருஷ்ண பலராமர்) பாண்டு புத்ரர்களைப் பார்த்தும் திரௌபதியைப் பார்த்தும் மிக்க துயரமுற்றவர்களாகத் துன்பக்குரல்களை வெளியிட்டுக்கொண்டு அழுதார்கள்.' பக்கம் 436.

'இங்கே நரநாராயண ரிருவரும் ஈஸ்வரத்தியானத்தில் பற்றுதலுள்ளவர்களாக நெடுங்காலம் தவம் புரிந்து அழிவற்ற ஸ்தானத்தை அடைந்தார்கள். பக்கம் 456.

'(க்ருத யுகத்தில்) நாராயணர் வெண்ணிறமுள்ளவராக இருந்தார். பக்கம் 543.

'(திரேதாயுகத்தில்) அச்சுதரும் சிவப்புநிறத்தை அடைகிறார்.' பக்கம் 544.

'துவாபரயுகத்தில் விஷ்ணுவானவர் பொன்னிறத்தை அடைகிறார்.' பக்கம் 544.

'கலியுகத்தை அடைந்து கேசவர் கருமைநிறமுள்ளவராகிறார். பக்கம் 545.

(ஹநுமார் சொல்வது) 'அந்த ராக்ஷஸாதமன் எனக்கு ஒருவனுக்கே போதாதவன். அந்த ராவணன் என்னால் கொல்லப்பட்டால் ராகவருடைய கீர்த்தியானது அழிந்துபோகும். அதனால், இது உபேக்ஷிக்கப்பட்டது.' பக்கம் 547.

'ருத்ர பகவான் (அர்ச்சுனனைப் பார்த்துக் 'குந்தீ நந்தன! வேண்டிய வரன்களை நீ வரிப்பாயாக. நான் அவைகளைக் கொடுக்கிறேன். சாவாமையைத் தவிர மற்ற உன் மனத்திலுள்ள விருப்பத்தைச் சொல்வாயாக' என்று சொன்னார்.' பக்கம் 615.

'ஆயிரம் சதுர்யுகங்கள் பிரம்மாவுக்கு ஒரு பகல்.' பக்கம் 700.

(கோவிந்தர் சொல்வது) 'க்ருதயுகத்தில் எனக்கு வெண்மை நிறம்; த்ரேதாயுகத்தில் மஞ்சள் நிறம்; த்வாபரயுகத்தை அடைந்தால் எனக்கு நீலவர்ணம். அப்படியே, கலியுகத்தில் கருமைநிறம்.' பக்கம் 713.

'பிரம்மதேவர் மஹாசேன (ஸ்கந்த)ரைப் பார்த்து, ருத்ரர் அக்னியில் பிரவேசித்தும் உமையவள் ஸ்வாஹையினிடத்தில் பிரவேசித்தும் நீ உண்டுபண்ணப்பட்டாய்' என்று சொன்னார்.' பக்கம் 874.

பார்வதியோடிருப்பவரும் பிரபுவுமான பரமசிவன் ரதத்தினால் பத்திரவடத்தைக்குறித்துப் புறப்பட்டார். அநேக தேவர்கள் ஸமூகங்களோடும் ருத்திரர்களோடும் சேர்ந்து அவருடைய வலப்பக்கத்தில் சென்றார்கள். அப்படியே (வலப்புறத்திலேயே) யமன் சென்றான். விஜயம் யமனுக்குப் பின் சென்றது. பட்டசம், விஜயமென்கிற சூலத்தைப் பின்தொடர்ந்து சென்றது. குடை, பட்டஸமென்கிற ஆயுதத்தைப் பின்தொடர்ந்து சென்றது. கமண்டலு, குடையைப் பின்தொடர்ந்து சென்றது. தண்டம், அந்தக் கமண்டலுவுக்கு வலப்புறத்திற் பிரகாசித்தது. இவைகளுக்குப் பின்புறத்தில், ருத்திரர் மாசற்ற ரதத்தில் வீற்றிருந்து எல்லாத் தேவர்களையும் தேஜஸினால் நன்றாக ஸந்தோஷிக்கும்படி செய்துகொண்டு சென்றார்'. பக்கம் 876, 877.



'எவரைச் சிவனென்றும் ஈசரென்றும் ருத்திரரென்றும் பினாகி என்றும் சொல்லுகிறார்களோ அந்த ருத்ரதேவனையை மனிதர்கள் இவ்வுலகில் நல்ல கர்மங்களால் பூஜிக்கிறார்கள். இவ்வண்ணம் எல்லாத் தேவ கணங்களும் பற்பல கருத்துக்களுடன் மகேஸ்வரரைப் பூஜிக்கின்றன.' பக்கம் 878.

பரமாத்மாவுக்கு மூன்று நிலைமைகள் இருக்கின்றன. பிரம்மமூர்த்தியானது படைக்கிறது; விஷ்ணு மூர்த்தியானது காக்கிறது; ருத்திர மூர்த்தியானது தன் சக்தியினால் அழிக்கிறது.' பக்கம் 1011.

'அவள் (சீதை) லக்ஷ்மணன்மீது சந்தேகம்கொண்டாள். அவள் அந்த லக்ஷ்மணனைப் பார்த்துக்கடுமையாக மூடனே! நீ மனத்தி விரும்புகிற இந்தவிருப்பம் கைகூடாது. நான் கத்தியை எடுத்துக்கொண்டு என்னை நானே மாய்த்துக்கொள்வேன்; மலையின் சிகரத்திலிருந்தாவது விழுவேன்; தீயிலாவது புகுவேன். பெண்புலியானது ஆண்நரிக்குட்டியை அடைவதுபோல நான் பர்த்தாவான ராமரைவிட்டு அதமனான உன்னை எவ்விதத்தாலும் அடையமாட்டேன்' என்று சொன்னாள்.' பக்கம் 1032.

'மன்மத பாணங்களாலடிக்கப்பட்டு ஸந்தாபத்தை அடைந்திருக்கிற அந்த ராமரைப் பார்த்து, லக்ஷ்மணன்.........' பக்கம் 1038, 1039.

ஸ்ரீமானான ஸ்ரீரகுநந்தனர் 'நானே இந்தக் கடலை உபாயத்தை அறிதற்காக ஆராதிக்கப்போகிறேன். உண்ணாவிரதமுள்ளவனாகப் பிரதிசயனம் (பிரதிசயனம் - ஒரு காரியத்தின் பொருட்டு அது சித்தியாகிற வரையில் அதற்குரிய தெய்வஸந்நிதியில் ஆகாரமின்றிப் படுப்பது) செய்வேன்' என்று கூறினார்.' பக்கம் 1057.

'ராகவர் லக்ஷ்மணனுடன் கூடினவராக ஆசமனம்செய்து சாஸ்திர விதிப்படி தர்ப்பப்படுக்கையில் சமுத்திரராஜனை நோக்கிப் பிரதிசயனம் செய்தார்.' பக்கம் 1057.

உ

# கொடுந் தாயர்.

(சைவத்திருவாளர், ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள்.)

ஸ்ரீசிவபிரான் அருளுருவினன். அவனருள் நிறைவு இப்படிப்பட்டதென்று எல்லாராலும் அறிய முடியாது. அதனை ஞானிகளே ஒருவாறு அறியவல்லார். ஆனால் நாமும் அறிய ஆசைப்படுவோம். நமக்கு அறிவிப்பது எது? அதுதான் தாயருள். நாம் சிவனருளை யறியத் தாயருள் ஒரு எடுத்துக்காட்டாக விருக்கிறது. உலகில் தாயருளே அருள். உலக முழுவதும் அவ்வருளிற்றான் மலர்கின்றது. தந்தையும் பிள்ளையை வணங்குஞ் சமயமுண்டு. தாய்க்கு அச்சமயம் எப்போதுமில்லை. முற்றத் துறந்த முனிவரும் தாய் பாதங்களிற் பணிபவரே. அவளருளின் பெருமைதான் அதற்குக்காரணம். தாயருள்போலுஞ் சிவனருளுள்ளது என்ற உணர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு நம்மிடம் பெருகுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அவன் பணியில் ஊக்கங்கொள்வோம். 'பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சால......' என்றது சுருதி.

எல்லாங் கொடுப்பது கற்பதரு. அதுவுங் கொடாத பொருள்கள் பல. காஞ்சிபுரங் கடைத்தெருவில் அவற்றையும் பெறலாம். அப்படியானால் அக்கடைத்தெரு கற்பதருவினும் வளம்படைத்ததன்றோ? ஆனால் அங்குங் கிடையாதபொருள்கள் இலவோ எனின் அவ்வில்லாதன பலவல்ல, சிலவல்ல, இரண்டேயா மென்க. அவைதான் தந்தையுந் தாயுமென்பார். 'தந்தைதா யிரண்டொழியப் பிறவெலாங் கொளத் தகுமரவணங்கள்' என்றது அத்தலபுராணம். ஆகவே தேடக்கிடையாத செல்வமாவர் தாய் தந்தையரென்பது சாத்திர சம்மதமாதல் காண்க. தந்தையாராய்ச்சி பின்னர்ச்செய்யப்படும். இங்காராயப்படுபவள் தாய்.

தாய்மை மனித சமூகத்துக்குமாத்திரம் உரியதன்று; விலங்கு பறவை முதலிய பல சீவராசிகட்கும் பொதுவானது. மக்களாவார் மனவுணர்ச்சியுடையார். அஃதில்லாதன மாக்கள். அவ்விரண்டு வர்க்கத்தாயிடமும் அருளுண்டு. புலித்தாயும் தன்குட்டியிடம் பேரருள் பாலிக்கின்றது. இதனால் தாயருளுக்கும் மனவுணர்ச்சிக்குஞ் சம்பந்தமில்லையென்பது தெரிக. எல்லாத்தாய்களுங்



குட்டி குஞ்சு குழவிகளைப் பெறுகின்றன. அவை வளரவேண்டும். அது சிவசங்கற்பம். அச்சிவனருளே அத்தாய்களிடந் தங்கி அவைகளை வளர்க்கின்றது.

குட்டிகுஞ்சுகள் வளர்ந்து எதேச்சையை யடைகின்றன. அப்போது அவற்றால் தாய்க்குஏதேனும் இலாபமுண்டா? தாய் அதை எதிர்பார்ப்பதுதானுண்டா? இரண்டுமில்லை. ஆகவே விலங்கு பறவைகளின் தாயருள் அவற்றின் குட்டி-குஞ்சுகள் எதேச்சையை யடைந்ததும் மறைகின்றது. அப்பால் தாய் எதுவோ? குட்டிகுஞ்சுகள் எவையோ? ஆனால் அவ்வருள் தான் மறையும்வரை அத்தாயிடம் என்றும் ஒன்றுபோ லிருக்கிறது. மனிதத் தாயிடமும் அவ்வருள் அப்படிப்பட்டதே. ஆனால் குழவி வளர்ந்தபிறகு அவ்வருள் அவளிடம் மறைவதென்று சொல்லமுடியாது. அஃது அப்படியே யிருக்கவுஞ் செய்யும், மாறவுஞ் செய்யும், மறையவுஞ் செய்யும். சாத்திரம் புகழுந் தாயருள் குட்டி குஞ்சு குழவிகளை வளர்க்கும் பொருட்டு அவளிடந் தங்கியிருக்குஞ் சிவனருளேயாம். அவ்வருள் தாய்க்கே சொந்தமாயின் குட்டிகுஞ்சுகள் எதேச்சை யடைந்தபிறகு விலங்குபறவைத் தாய்களிடம் அது மறையவேண்டாம்; குழவிகள் எதேச்சையை யடைந்தபிறகு மனிதத்தாயிடம் அது விபரீதமுறவேண்டாம். 'கற்றாவின் மனம் போலக் கசிந்துருகவேண்டுவனே' என்று விலங்குத்தாயருளைச் சாத்திரம் புகழவும் வேண்டாம். குட்டி குஞ்சுகளை வளர்க்கும் விலங்கு பறவைத் தாயருளும் குழவியை வளர்க்கும் மனிதத் தாயருளும் ஒன்றேயென்பதையும் மனிதத்தாய்க்கு அவ்வளவில் ஏற்றமொன்றுமில்லை யென்பதையும் ஈண்டுக் குறித்து வைத்துக்கொள்க.

பிள்ளை பலவகைப் பெருமைகளையுடையனாயிருப்பன். ஆனால் தாயைப் புறக்கணித்தல் அவனுக்கடாது. அப்பெருமைகளனைத்தும் மணமிழக்கும். அவனுக்கு அவளைப் போற்றுவது கடன். அவன் அவளை அன்பாற் போற்றுவதிருக்கட்டும். தனக்கு மனமில்லாவிட்டாலும் அவன் அவளைப் போற்றியே தீரவேண்டும். மறந்தும் ஒரு சிறு அபசாரமும் அவளுக்கு அவன் செய்துவிடக் கூடாது. அவள் சபிப்பள். உலகம் பழிக்கும். அவ்வளவு நிர்ப்பந்தமான தாசத்துவம் அது. அவ்வடிமைத்திறம் அவனுக்கிருக்க

வேண்டுவதேன்? அவள் அவனைப்பெற்று வளர்த்தாள் அதனாலா? இல்லை. குழந்தைகளைப் பெறுவதும் வளர்ப்பதும் தாய்க்கு மிருக சுபாவமே. அது முன் காட்டப்பட்டது. குழவி வளர்ந்து எதேச்சையை யடைந்த பிறகும் மனிதத்தாயருள் மாறாமல் மறையாமல் இருக்கவேண்டும். அவ்வருள்தான் மனிதசமூகத்துக்குத் தனிப்பட்ட பெருமையைத் தருவதாகும். அத்தாயே மனிதத்தாய். அவள் பொருட்டே சாத்திரம் புதல்வனை நோக்கித் தாய் தெய்வத்துக்குச் சமம், அவளைப்பேண், வயிறெரியப் பண்ணாதே, சாங்காறும் அவளுக்கு ஊழியஞ்செய் என்றெல்லாங் கட்டளையிடுகின்றது.

ஆனால் தாய் பிள்ளையைப் பெற்றுவிட்டதே போதும். அதனாலேயே அவள் அவனுக்கு அதிகாரியாய் விடுகிறாள். அவள் தன் குழவி வளர்ந்து எதேச்சையை யடைந்த பிறகும் கருணையுடையளாகத்தானிருப்பாள்; கொடுமையென்பது அவளிடமிருக்க மாட்டாது; இருந்தாலுங் குற்றமில்லை; அவள் அது செய்தற்கும் உரியளே; பிள்ளை அதனைப்பொறுத்துக்கொள்ளவே வேண்டும்என்பது எப்படியோ தீர்மானமான விஷயமாய்ப் போய்விட்டது. அதனால் அவள் தன்பாலுள்ள அச்சிவனருளைத் தன்னருளேயெனச் சுவீகரித்துக் கொண்டு அதைப்பிள்ளை எதேச்சையடைந்ததும் அவனுக்குவிற்கப்பார்க்கிறாள். தாய்மாரிலும் ஆயிரவருக்குத்தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதின்மர்சாமானியப்பெண்டிர்தான். அறியாமையென்பது அவரிடம் தாராளமாயிருக்கும். அவருள் ஒருத்தியாகிய அவள் தன்யோசனையையே பிள்ளை கேட்கவேண்டுமென்று விரும்புகிறாள். மடத்தனமான யோசனையாயிருக்கும் அது. பிள்ளை எவ்வளவு புத்திசாலியானாலும் ஆகட்டும். அந்த யோசனையை அவன் அங்கீகரிக்கவேண்டும். இன்றேல் அவளுக்குக் கோபம் வந்துவிடுகிறது. கொடுங்கோல் மன்னன் குடியை நடத்துவது போல் அவள் அவனை நடத்தத் தொடங்கிவிடுகிறாள். அவன் படும் இம்சை அம்மம்ம! அபரிமிதம். எத்தனை மடத்தாய்மார் நல்ல பிள்ளைகளையுடையராயிருந்தும் அவர்களை நம்பாமல் பல தொல்லைகளுக்கு உட்படுத்தி அவர்கள் வாழ்க்கையில் மண்போடுகின்றனர்! அன்ன சரிதங்களிற் சில வருமாறு. பிள்ளையென்பதிற் பெண்ணும் அடங்கும்.



ஒருதாய் கற்புக்கெட்டாள். பிள்ளை பெரியவனானதும் அதைத் தெரிந்து அவளைத் தடுக்கமுயன்றான். முடியவில்லை. அதனால் அவ்விருவருக்குஞ் சண்டை.

ஒருதாய் கற்புக்கெட்டாள். புஷ்பவதியாகியிருந்த அவள் மகளிடமும் அச்சோரன் விருப்பம் வைத்தான். தாய் அதற்குடனாகி அம்மகளை வற்புறுத்தினாள். அவள் இணங்காமல் கிணற்றில் விழுந்தாள். ஆனாற் சாகவில்லை. ஊரார் தாயைப் பழித்தனர். தாய் அம்மகளை மரண பரியந்தம் பகைத்தாள்.

ஒரு தாய் ஒரு அணாவுக்கு எத்தனை பைசவென்று கணக்குத் தெரியாதவள். அதனால் வீட்டுச் செலவுக்குப் பிள்ளை அவளிடம் பணங்கொடுப்பதில்லை. அவன் மனைவி படித்தவள். அவளிடமே அவன் பணங்கொடுப்பான். தாய் அது பொறாள். அதனால் இருவருக்குஞ் சண்டை.

ஒருதாய் தன் மகளுக்கும் அவளை மணந்த தன் தம்பிக்கும் அவர்கள் பெற்ற பிள்ளைக்கும் உணவுதேடித்தரத் தன் ஒரே மகனை உபயோகித்துக் கொண்டாள். அப்பொருட்டு அவன் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாதென்று அவளால் தடைசெய்யப்பட்டான்.

ஒரு தாய்க்கு இரண்டு புதல்வர் உளர். மூத்தவன் யோக்கியன்; பெருங்குடும்பியாயிருக்கிறான். இளையவன் குடிகாரன். அவனுக்குங் கலியாணஞ் செய்துவைக்கும்படி அவள் அம்மூத்தவனை இடைவிடாமல் தொந்தரவு செய்துகொண்டு வருகிறாள். அவன் மறுக்கிறான். சண்டை நடந்தவண்ணமாயிருக்கிறது.

ஒரு தாய்க்குப் பலவூர்களையுஞ் சுற்றிப்பார்க்க வேண்டுமென்பது ஆசை. பிள்ளையோ குறைந்த வருவாயையுடையவன். ஆயினும் அவன் கடன் பட்டாயினும் அவளுக்கு வேண்டுந் தொகையைக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவள் கிணற்றிற் குளத்திற்போய் விழுந்துவிடுவதாகப் பயமுறுத்துவாள். ஒவ்வொரு சமயம் அவள் திடீரென்று மறைந்துவிடுவதும் உண்டு. அவன் அவள் பொருட்டுக் கடன்படுவான்: அவளைத் தேடித் திரிவான்.

ஒருதாயின் ஒருமகன் சீவனத்தின் பொருட்டுச் சில நூறு மைல்களுக்கப்பாலுள்ள ஒரூரிற்போய்க் கிடக்கிறான். வருவாய் மிகவுங் குறைவு. அத்தாய் அவனுக்கு அதிக வரும்படியுண்டென்று எண்ணிக்கொண்டாள். அவளுக்கு இரண்டு புதல்விகளும் உண்டு. அவர்கள் கணவன்மாரும் ஏழைகளே. அப்புத்திரிகளுக்கு வேண்டும் பணவுதவிகளை அம்மகன் செய்யவேண்டுமாம். அத்தாய்க்கு அவ்வாசை யிருக்கிறது. அம்மகனால் அதுமுடியவில்லை.

அதனால் அம்மகன் வயிற்றுப் பேரனைத்தானும் அவள் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை.

ஒரு தாய் தன் பிள்ளைக்கு மருந்திட்டாகப் பிரஸ்தாபம். அதனால் அப்பிள்ளை செத்துப்பிழைத்தான். அதுமுதல் அத்தாயின் கையால் அவன் தண்ணீருஞ் சாப்பிடுவதில்லை.

ஒரு தாய்க்கு மூன்று புதல்வர்களுளர். மூத்தவன் எதேச்சையாய்த் திரிவான். தம்பிமாரே சொத்துக்களை மேற்பார்ப்பவர். அண்ணன் எதேச்சையாயிருப்பது பற்றிய கவலை அவருக்கில்லை. தாய் அது பொறுமல் அத்தம்பிமாரைக் கிளறிவிட்டாள். அவருக்கும் அண்ணனுக்கும் மனஸ்தாபம் வந்தது. தம்பிமாரும் எதேச்சையையடைந்தனர். மேற்பார்ப்பாரில்லாமற் சொத்து பாழாய் வருகிறது.

ஒருதாய் தன் மகனுக்கு ஒருவாரத்துக்குமுன் கலியாணமான மருமகள் எண்ணெய் முழுக்குக்குப் போகும்போது நகைகளைக் கழற்றித் தன்கையிற் கொடாமல் அவள் கணவன் கையிற் கொடுத்தாள். அம்மகன் அவற்றை அத்தாயிடங்கொடுவென்று மனைவிக்குக் கட்டளையிடாமற் கையேந்தி வாங்கினான். அதனால் தாய்க்குத் தன் மதிப்புக்கெட்டுவிட்டதென்று தோன்றியது. அதனால் அவள் அவனுடன் சண்டைபிடிக்கலாயினள்.

ஒருதாய் தன் மகளை வழக்கு மன்றத்துக் கிழுத்து அழவைத்தாள்.

ஒரு பெண்ணுக்குப் பெண்கூட்டங்களுள் முக்கியமான பொறுப்புடையவர் அவள் தாயும் மாமியுமே. அவள்பால் இருவருமே அன்புங் கடனுமுடையவர். தாய்க்கு அன்பு அதிகம். மாமிக்குக் கடன் அதிகம். அவ்விருவருள்ளும் பிரசவகாலங்களில் அவளுக்கு உதவுபவள் அவள் தாயே. பரமசிவனும் அதனாலேயே தாயுமானவராயினர். மாமியும் மற்றவரும் அப்பரா அவளுக்கு மனமில்லாமற் போயிற்று. உலகவியலும் அதுவே. ஆனால் ஒருதாய் தன்மகளுக்குப் பிரசவம் பார்க்கவந்திருந்து அவள் பிரசவித்தமூன்றும் நாளே அவளை ஆதரவற்றவளாய் விட்டுவிட்டுத் தன் மகன் வீட்டுக்கு ஓடிவிட்டாள்.

மற்றவை விரிவஞ்சி விடப்பட்டன. அம்மனஸ்தாபங்களெல்லாம் தோன்றியதும் மறையவில்லை; வளர்ந்துகொண்டே பிள்ளைகளை இம்சித்து வருகின்றன. அப்பிள்ளைகளெல்லாரும் நல்லவரென்பதையுந் தெரிக. அறிவில்லாத்தாய், சீலமில்லாத்தாய், கடுங்கோபத்தாய், பொறாமைத்தாய், பிடிவாதத்தாய், கோட்சொல்லித்தாய், குடும்பப்பிரிவினையை யுண்டாக்குந்தாய், பயங்காட்டுந்தாய், மகனை விரும்பி மகளை வெறுக்குந்தாய், மகளை விரும்பி மகனை வெறுக்குந்தாய், ஒருமகனை விரும்பி இன்னொரு மகனை வெறுக்குந்



தாய், ஒரு மகளை விரும்பி இன்னொரு மகளை வெறுக்குந்தாய், பணக்கார மகாரை விரும்பி ஏழைமகாரை வெறுக்குந்தாய், ஏழை மகாரை விரும்பிப் பணக்கார மகாரை வெறுக்குந்தாய், முதலிய கொடுந்தாய்மார் பெருகிவருமிந்நாளில் அத்தொல்லையைப் பலரிடும் பங்களிற் பார்க்கலாம்.

பெற்றமனம் பித்து பிள்ளைமனங் கல்லு என்பது பழமொழி. பிள்ளை தாய்க்குக் கொடுமைகள் செய்வதுண்டு. அவற்றை விளக்குஞ் சரிதங்கள் பல. சாத்திரத்தில் அவை பிரசித்தம். ஆனால் தாய் பிள்ளைக்குக் கொடுமை செய்த சரிதங்களை அதிற் காண்டல் அரிது. அதனால் அக்கொடுமைகளை யில்லையென்று சொல்லிவிட முடியாது. அவையும் பலவே. உலகமாகிய புத்தகத்தில் அவற்றைப் பார்க்கலாம். பிள்ளை எதேச்சையை யடைவான். அப்போது அவனுக்குக் கலியாணமாகும். அவன் மனைவிக்கு அவன் தாய் மாமியாவாள். மாமி மருகியைப் பகைப்பது பெரும்பான்மை. அம்முகத்தால் அவள் அப்பிள்ளைக்கும் பொல்லாங்கு செய்யப் பின்னிடாள். மகள் முண்டையானாளேயென்ற கவலையால் மருகியும் முண்டையாக ஆசைப்படும் மாமி மகனைக் கொல்லவுங் கூடிய தாய்தானே. சாத்திரம் அத்தாய்க் கொடுமையை மாமிக்கொடுமையென்று மறைத்துப் பேசும். அவ்வளவே.

தாய் சிவனருளுக்கு உறைவிடம். அவள் எப்போதும் அப்படியிருத்தல்வேண்டும். சிவனருளுண்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குமவள் அப்பெருமையை யிழத்தல் கூடாது. இழக்கின் உலகிற் கஃதொரு நஷ்டமுமாகும். அவள் அப்பெருமையைக் காத்துக்கொள்வதெவ்வாறு? அப்பொருட்டு அவள் தன்னை ஒரு சாமானியப் பெண்டாகவே நினைத்தல்வேண்டும். தன்னைப் பிள்ளைக்குத் தெய்வமென அவள் நினைத்தலாகாது. அவளைத் தெய்வமென எண்ணவேண்டுவது பிள்ளையின் கடன். பிள்ளையின் யோசனையை அவள் மதிக்கவேண்டும். எதேச்சையையடைந்த பிள்ளையிடம் அவள் ஒழுங்கு மீறக்கூடாது. அப்பிள்ளையிடம் நடந்துகொள்ள அவளுக்கும் பல சட்டங்கள் உண்டு. அவைகளை அவள் நன்கு தெரிதல்வேண்டும். பிள்ளையால் தனக்குள்ள ஆதிக்கத்தை மட்டுப்படுத்த எத்தவித ஒழுங்குந் தனக்குக் கிடையாதென அவள் எண்ணி இறுமாத்தல் பெருந்தவறு. கணவனாட்சியை யிழந்த பிறகு அவள் பிள்ளைக் கடக்கமே. அவள் பிள்ளையை நேசிப்பதன்மூலம் மருகியை நேசித்தல்வேண்டும்; மருகியைப் பகைத்து அதன்மூலம் பிள்ளையைப்பகைத்தல் கூடாது. பிள்ளையை நம்பிக் குடும்பப் பொறுப்பை அவனிடம் அவள் விட்டுவிடவேண்டும். இவற்றையும் இவைபோன்ற பிறவற்றையும் அவள்தெரிந்து நடந்தால் அவளுக்கு அப்பெருமை தங்கும். பிள்ளைக்கு நல்லின்பம் பொங்கும்.

உ

# இன்னிசை மயமாக இலங்கும்
# செந்தமிழ்ப் பாடல்கள்.

——()[]()——

(திரு, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
திருச்சி, வானொலியின் சொற்பொழிவு.)

இசை என்பது மிக்க மேன்மையும் நுண்மையும் வாய்ந்து செவிப்புலனைக் குளிர்வித்து உள்ளத்தைக்களிவிக்கும் இனியவோசையாகும். தும்பி, வண்டு, குயில், கிளி, பூவை முதலிய உயிர்களிடத்து இவ்வின்னோசை இயற்கையாகவே அமைந்து இன்பம் செய்கின்றது. மக்கள் தம் நுண்ணறிவு மாட்சியால் பற்பலவகையாகிய இன்னிசைகளைத் தம் மிடற்றிலிருந்தும், கருவிகளிலிருந்தும் எழுப்புகின்றனர்.

இசை இயல்புகளையும் வேறுபாடுகளையும் சிறப்பாக அறியாவிடினும் பொதுவகையில் இசையை விரும்பாதவர்கள் யாரும் இல்லை. பச்சிளங் குழவியும் இசையை விழைகின்றது. ஆவினங்கள் இசையைக்கேட்டு அசைவிடாதிருக்கின்றன. யானை முதலிய வனவிலங்குகளும் பாம்பு முதலியனவும் இசைக்கு வசமாகின்றன. அறிவே உருவாகிய ஆண்டவனும் இசையை விரும்புகின்றான் என்றும் அவன் இசை வடிவமாக இருக்கின்றான் என்றும் இசையின் பயனாக உள்ளான் என்றும் இசை பாடுகின்றான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

"ஏழிசையாய், இசைப்பயனாய்" என்று சுந்தரரும், "எம்மிறை நல் வீணைவாசிக்குமே" என்று அப்பரும் கூறுதல் காண்க. கலைகட்கெல்லாம் தெய்வமாகிய நாமகள் கையில் வீணையை வைத்திருத்தலாலும் நம் முன்னோர்கள் இசைக் கலையை எவ்வளவு சிறந்ததாகப் போற்றியிருத்தல் வேண்டும்;

**இசை போற்றப்பட்ட முறை:** இனி, தமிழ் மக்கள் பண்டுதொட்டு இசையை எவ்வாறு போற்றிவந்தனர் என்பதைத்தமிழ் நூல்களின் ஆதரவு கொண்டு நோக்குவோம். தமிழ் மொழியானது மிகப் பழைய காலத்தில் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என மூன்று பெரும் *பிரிவுடையதாக இருந்தது. அதனால் முத்தமிழ் என்ற வழக்கு உண்டாயிற்று. பழைய சங்க காலங்களில் முத்தமிழுக்கும் இலக்கண இலக்கியங்கள் பற்பல இருந்தன. ஆசிரியர் அகத்தியனார் இயற்றிய அகத்தியம் என்பது முத்தமிழ் இலக்கணமே. தலைச்சங்கப் புலவர்கள் இயற்றியபெருநாரை, பெருங்குருகு என்பனவும் நாரதர் இயற்றிய பஞ்சபாரதீயம், அகத்தியர் மாணாக்கராகிய சிகண்டி என்பவர் இயற்றிய இசை நுணுக்கம் முதலாயினவும் பழைய இசைத் தமிழ் நூல்களாம்.



**புராதன நூல்களிற் காணப்படுவது:** ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகளின் முன்தோன்றிய பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இசையைப் பற்றிய குறிப்புகளும் இசைபாடுதலையே தொழிலாக உடைய பாணர் முதலானவர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன.

அந்நூலிலே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலங்கட்கும் வெவ்வேறுவகையான யாழ் அல்லது பண் உண்டு என்று குறிப்பிடப்படுவதால் அக்காலத்தே தமிழகம் முழுதும் இசைக்கலை பரவியிருந்த தென்பதும் எவ்வகைக் குடிமக்களும் இசை யுணர்ச்சி உடையவராய் இருந்தனர் என்பதும் பெறப்படும்.

இரண்டாயிரம் ஆண்டுகளின் முன் விளங்கிய தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குழல் யாழ் என்னும் இசைக் கருவிகளைப் பற்றியும், பண்ணைப்பற்றியும் திருக்குறளிற் கூறியுள்ளார். மற்றும் சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் அவைபற்றிய குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகார காப்பியத்தில் இசைக் கருவிகளின் பெயர்களும், இலக்கணங்களும். கருவிகளிலும் கண்டத்திலும் இசைகள் பிறக்கும் முறைமையும் பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அக்காலத்திலே,பேரியாழ்,மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என நால்வகை யாழ்கள் இருந்தன. பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை தடாரி முதலிய முப்பத்தொரு வகைத் தோற்கருவிகள் வாசிக்கப்பட்டன. ஆயிரம் நரம்புடைய ஆதி யாழ் எண்பத்தொன்று இருந்ததென்றும், ஆதியிசை பதினோராயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்று (11991) என்றும் கூறினால் பெரும்பாலார் வியப்படையக்கூடும். ஆனால் பழந்தமிழ் நூல்கள் அவற்றின் உண்மையைத் தெரிவிக்கின்றன.

**பண்ணடைச்சிறப்பு:** ஷட்ஜம் முதலிய ஏழிசைகளுக்கும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் தமிழ்ப்பெயர்கள் வழங்கின. இப்பொழுது ஆலாபனம் என்பது ஆளத்தி என்னும் பெயரால் வழங்கிற்று. த, ந, ம என்னும் மூன்று மெய்யினங்களோடு குற்றெழுத்து ஐந்தும், நெட்டெழுத்து ஐந்தும் தென்னா தெனா எனும் அசைகளும்ஆளத்திசெய்தற்கு உரியவாயிருந்தன. மூலாதாரம் தொடங்கிஎழுகின்ற நாதம் ஆளத்தியாய் பின்பு இசையென்றும் பண்என்றும் பெயர்பெறலாயின. ஜநகராகங்கள், பண் என்றும் ஜன்யராகங்கள், திறம் என்றும் கூறப்பட்டன. இசைப்பாட்டுகளெல்லாம் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. வரி, உரு முதலியவற்றில் எத்தனையோ பல வகைகள் உண்டு.

186977

**கீர்த்தனங்கள்:** இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப்படுவன உருக்களில் அடங்கலாகும். பலவகையான கூத்துக்களோடும் வரிப் பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சித்து, சிந்து, ஆண்டி அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்துவகைகளும் அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன; அவை பெரும்பாலும் மகளிருடைய விளையாட்டுகளாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாந்தியடிப்பதும் பாட்டு, உழத்தியர் நாற்று நடுவதும் பாட்டு, களைபறிப்பதும் பாட்டு, அவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுகளோடு நிகழ்ந்தன.

**இசை இன்ப விளையாட்டு:** இவ்வாற்றால் முற்காலத்தில் தமிழகத் திருந்த ஆடவரும், மகளிரும் இசையும் கூத்தும் ஆகிய இன்பவிளையாட்டுகளால் களி சிறந்து உடம்பும் உள்ளமும் தளிர்த்திருந்தனர் என்னும் உண்மை புலனாம் என்க. அம்மனை, பந்து, ஊசல், வள்ளை என்னும் வரிப்பாட்டுகளைச் சிலப்பதிகாரத்திற் காணலாம். அன்பே வடிவாகிய மாணிக்கவாசகப் பெருமான் ஓதுவார் உள்ளத்தை உருக்கும் திருவாசகத்திலே, தெள்ளேணம், சாழல், தோணோக்கம், உந்திமுதலாகியவரிப்பாடல்களை அமைத்துள்ளார் என்றால், அப்பாடல்களும் கூத்துக்களும் அந்நாளில் எவ்வளவாகக் கொண்டாடப்பட்டிருத்தல்வேண்டும்.

**ஒப்பற்ற இசைப்பாக்கள்:** இனி, தமிழிலே ஒப்பற்ற இசைப்பாக்களாக இப்பொழுது நமக்குக் கிடைத்திருப்பன யாவை என நோக்குதும். சிலப்பதிகாரத்தில் உள்ள கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை என்னும் ஆறுகாதைகளும் இசைப்பாக்களின் தொகுதியேயாகும்.

"பவளவுலக்கை கையாற் பற்றித் தவளமுத்தங் குறுவாள் செங்கண் குவளையல்ல - கொடிய! கொடிய!

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதைவில்லிட
மின்னிலங்கு மேகலைகளார்ப்ப வார்ப்ப வெங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்று பந்தடித்துமே
தேவராரமார்பன்வாழ்க வென்று பந்தடித்துமே".

என்பன முறையே கானல் வரியிலும் வாழ்த்துக் காதையிலும் உள்ளன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருவாய்மொழி முதயலினவோ வானோரும் அளவிடற்கரிய சிறப்புடைய இசைப்பெருஞ் செல்வக் களஞ்சியங்களாகும். அவற்றிற்குரிய பண்களின் இயல்பறிந்து முறைப்படி பாடுவார் தொகை அருகிவருவது பெரிதும் இரங்கத்தக்கதாகும்.



**இயற்றமிழில் இசைப்பகுதி:** இதுகாறும் முத்தமிழில் ஒரு பகுதியான இசையைப் பற்றியே சிறிது ஆராய்ந்தோம். மற்றொரு பகுதியான இயற்றமிழை நோக்கின் அதுவும் இசையுடன் பிரவியே நடைபெறுதல் புலனாகும். தொல்காப்பியனார் சொற்றொடர்களின் இசையமைதிக்கு வண்ணம் என்று பெயர் கொடுத்து அதனை இருபது வகைப்படுத்தியுள்ளனர். வல்லெழுத்துப் பயின்று வருவது வல்லிசை வண்ணம், மெல்லெழுத்துப் பயின்று வருவது மெல்லிசை வண்ணம், நெட்டெழுத்துப் பயில்வது நெடுஞ்சீர்வண்ணம், குற்றெழுத்துப் பயில்வது குறுஞ்சீர் வண்ணம் என்று இவ்வாறு வண்ணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இசனாலும் செய்யுட்களெல்லாம் எதுகை, மோனை முதலிய தொடைவிகற்பங்களோடு பாடப்படுதலும் இயற்றமிழ்ப் பாக்களும் இசையமைதி பெற்றிருப்பது நன்கு புலனாகும். வெண்பா முதலிய பாக்கள் ஒவ்வொன்றும ஒவ்வொரு வகையான இசையுடனேயே பண்டு தொட்டு ஓதப்படுகின்றன. அவற்றுள்ளும் கலிப்பா பரிபாடல் என்பவற்றை இசைப்பாக்கள் என்றே பேராசிரியர் முதலிய பேருரையாளர்கள் கூறுவாராயினர்.

எட்டுத்தொகையில் ஒன்றாகிய பரிபாடற் செய்யுட்கள் ஒவ்வொன்றுக்கும் பண் வகுத்திருப்பதும் நோக்கற்பாலது. பாலையாழ், நோதிரம், காந்தாரம் என்ற பண்கள் அதிற் குறிக்கப்பட்டுள்ளன. இசை வகுத்தோராக ஒரு பதின்மர் பெயர் அதிற் காணப்படுதலின் அப்பொழுது இசைவாணர்கள் எவ்வளவு மிகுதியாக இருத்தல்வேண்டும் என்று கருதலாம். மற்றும் வெண்பா முதலிய பாக்களுக்கு இனமாக வகுக்கப்பெற்ற தாழிசை துறை முதலாயினவும் இசைப்பாக்களே யாதல்வேண்டும்.

மற்றும் மக்களுடையஉள்ளத் துணர்ச்சியாகிய வீரம், அச்சம், இழிபு, வியப்பு, காமம், அவலம், வெகுளி, நகை, சாந்தம் என்பனவற்றை மெய்ப்படத்தோற்றுவிக்கும் கவிதைகள் எல்லாம் இசையமைதியுடையனவே என்னலாம். தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் உள்ள உணர்ச்சியாகிய சுவைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டிருத்தலின், அக்காலத்திலேயே அத்தகைய செய்யுட்கள் மிக்கிருந்தனவாதல்வேண்டும். நமக்குக் கிடைத்துள்ள இடைக்காலத்து நூல்களிலும் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலியன சுவையுணர்ச்சிகள் ததும்பப்பெற்ற பாடல்களாக அமைந்தனவாகும்.

**கம்பரின் கவிநயம்:** இராமன் வனம் புகுவான் என்ற சொல்லைக் கேட்ட அளவில் அயோத்திமா நகரம் எய்திய துயரத்தைக்கம்பர் வர்ணித்திருக்கும் பாடலில் இரண்டை நோக்குவோம்.

"ஆவும் அழுத அதன்கன் றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புனற்புள்ளழுத கள்ளொழுகும்
காவும் அழுத களிறுஅழுத கால்வயப்போர்
மாவும் அழுத அம்மன்னவனை மானவே."

"கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள் போற் கோசலை யென்றேவா து வெய்துயிர்ப்பார்
ஐயா இளங்கோவே ஆற்றுதியோ நீ யென்பார்
செய் ஆர் அழலுற்றது உற்றார் அந்நீணகரார்"

அவலச்சுவை என்னும் சோகரசம் இவற்றில் எவ்வளவு ததும்புகின்றன பாருங்கள்.

"செல்லும் சொல் வல்லானெதிர் தம்பியும் தெவ்வர்
சொல்லும் சொல்லுஞ் சுமந்தேன் இருதோளை எனச் சோம்பியோங்கும்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலும் கட்டமைந்த
வில்லும் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டு என்னையென்றான்."

சீற்றம் தணியுமாறு கூறிய இராமனுக்கு எதிராக எனது சீற்றத்தால் என்ன பயன் என்று இலக்குமணன் கூறும்மாற்றத்திலும் அவனது கோப உணர்ச்சி பொங்கித் ததும்புதலை அங்கை நெல்லியெனக் காட்டும் இச்செய்யுளின் அருமையை நோக்குங்கள். இனி, சுந்தரமூர்த்திகள் பரவை நாச்சியாரைக் கண்டதனைத் தெரிவிக்கும்.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என்றதிசயித்தார்.

என்னும் அருமைத்தெய்வப்பாடலில் விளங்கும் உவகை வியப்பு என்னும் சிருங்கார அற்புத ரஸ உணர்ச்சிகளை எங்ஙனம் அளவிட்டு உரைக்க வல்லேம்.

இன்னிசைமயம்:— இங்ஙனம் இன்னிசை மயமாக இருக்கும் செந்தமிழ்ப்பாடல்கள் பாற்கடல்போல் பரந்துள்ளன. அவற்றையெல்லாம் படித்தறிந்து இன்புறவேண்டியது தமிழ்மக்கள் கடனாகும்.

---

உ

# தீண்டாதார் ஆலயப்பிரவேச கண்டனம்.

ஜூலை 24உ மாலை காரைக்குடி குருபூஜை மடத்திற்கு முன்பாக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர் மு.த. வெ. சொக்கலிங்கம் செட்டியார் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசியதாவது:—

ஹரிஜன ஆலயப்பிரவேசம் மதுரை ஸ்ரீமீனாக்ஷி கோவிலில் நடந்துவிட்டதுபற்றி நாடெங்கும் பரபரப்பான பேச்சுக்கள் பலவாறாக இருக்கின்றன. ஹரிஜனங்களை ஆதரித்து அவர்களுக்குச் சௌகர்யம் செய்துகொடுக்க ஜாதி இந்துக்கள் கடமைப்பட்டவர்கள்தான். ஆனால் ஆலயங்களில் பிரவேசிக்கச்செய்ய சாஸ்திரத்திலும் அநுபவத்திலும் இடம் கிடையாது. பொதுவாக எந்நாட்டிலும், எந்த மதத்திலும், வித்தியாசமில்லாத மனிதசமூகமே இல்லை. வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். ஆலய சம்பந்தப்பட்ட அளவில், ஐரோப்பியரையெடுத்துக்கொள்வோம். லார்டு குடும்பத்தாருக்கும், ஜாதி ஐரோப்பியர்களுக்கும், கன்வர்ட்டு கிறிஸ்தவர்களுக்கும், மாதாகோவிலில் பிரார்த்தனைஇடம் தனித்தனியாக இல்லையா?

மலாய் நாட்டில் விசேஷகாலத்தில் தெண்டாயுதபாணி பூஜையில் பந்தி வித்தியாசமில்லாது சோறுபோடுகிறார்களென்றால் இங்கும் மகேஸ்வர பூஜைகளில் சர்வஜனங்களுக்கும் சோறுபோடவில்லையா? சிறப்பாக ஆகம சம்பந்தமான ஆலயங்களில் ஹரிஜனப் பிரவேசம் செய்வதும், அதற்கு சாதகமாகசட்டம் உண்டாக்குவதும் பொருத்தமற்ற விஷயமாகவும் பொதுஜனங்கள்மனதில் அதிக ஆத்திரத்தை உண்டுபண்ணக்கூடியதாகவுமிருக்கின்றது.

திரு, சேவு. மெ. மெய்யப்பசெட்டியார் பேசியதாவது:—

ஹரிஜன ஆலயப்பிரவேசம் பற்றித் தலைவரவர்கள் முன்னுரையில் பேசிய விஷயங்கள் குறிப்பிடத்தக்கதாகும். ஆழ்ந்து யோசித்தால் மனதில் வித்தியாசமில்லாது பரிசுத்த எண்ணமும் வேற்றுமை இல்லாத் தன்மையுமுடையவர்களைக் காண்பது அரிதே. ஹரிஜனங்களை நமது முன்னோர்கள் அவர்கள் வாழ்க்கைக்குத்தக்கவாறு ஆதரித்தே வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் ஆதரித்துக்கொண்டுதான் வருகிறோம். அவர்களுக்கு அறிவுவிளக்கத்தையும், ஆகாரவசதிகள் விடுதிவசதிகள் முதலியவற்றையும் செய்ய

வேண்டியது அவசியமானதே. தவிர அவர்களுக்கில்லாஉரிமைகளும் கொடுத்துவிடுவது என்றால் அதுசெய்கையில் பொருந்தாததாகவே முடியும்.

"நந்தனாரும், திருப்பாணாழ்வாரும் கோவிலுக்குள் போகவில்லையா" என்று சரித்திர ஆராய்ச்சி இல்லாது சொல்கிறார்கள். அவர்கள் உண்மையான தலைசிறந்த பக்தர்கள். பக்தி இருந்தும் அவர்கள் விதி கடந்து ஆலயத்தில் பிரவேசிக்கவில்லை. ஆண்டவன் அவர்கள் பக்தியின் பெருக்கை உலகத்தார் உணர அவர்களுக்குவைதீகசம்ஸ்காரம்செய்துஆலயத்திற்குள் வைதீகர்கள் அனைவரும்அவர்களைவணங்கி அழைத்துவரும்படிகட்டளையிட்டார். அதுபோல், ஒரு நந்தனார்தன்மைபெற்ற ஹரிஜனப்பெரியாரையும், திருப்பாணாழ்வார் தன்மைபெற்ற ஹரிஜனப் பெரியாரையும் எந்த வைதீகரும் மறுக்கமுடியாது. ஆர்வத்துடன் வரவேற்க விரும்புவார்கள். முடிவாக நந்தனாரும், ஆழ்வாரும் மீண்டும் சேரிக்கு வரவில்லை. ஜோதியிற்கலந்து தெய்வீகத்தன்மைபெற்றுவிட்டார்கள்.

நமது ஆலயங்களிலும் ஹரிஜனங்களுக்கு அவர்கள் பழக்க வழக்கங்களுக்குத் தக்க உரிமைகள் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் இறைவனைக்கண்டு மகிழவே உத்ஸவங்கள் நியமனம் செய்துள்ளார்கள். அவர்களும்நம் தெய்வங்களைத் தனி ஆலயங்கள் ஏற்படுத்தி வணங்குகிறார்கள். பெரும்பாலும் பறைநாச்சி அம்மன் கோவில்கள் பெரிய ஊர்களில் இருக்கின்றன. அதற்கு அவர்களை பூஜையும் செய்கிறார்கள். நாமும் காணிக்கைகள் கொடுக்கிறோம். சிறப்பாகநம்முன்னோர்கள் அவ்வேற்றுமையில்லாது ஹரிஜனங்களை ஆதரித்தே வந்திருக்கின்றார்கள். ஆனால் விதிகடந்து ஆதரிக்கவில்லை.

திரு, ம. இராமையா தேசிகர்ஹரிஜன ஆலயப்பிரவேசம்சாஸ்திரத்திற்கு முற்றும் விரோதமானதென்றும் ராமகிருஷ்ணபரமஹம்சரே ஞானிகளுக்கு வேற்றுமை இல்லையே தவிர நம்போன்ற உலகியல் மக்களுக்குப் புறவேற்றுமை அவசியம் வேண்டுமென்று கூறியிருப்பதாகவும் பல கதைகள் எடுத்துக்கூறினார். தலைவரின் தக்க முடிவுரையுடன் கண்டனத் தீர்மானமும் செய்து சென்னை கவர்ண்மெண்டுக்கு அனுப்புவதாகத்தீர்மானிக்கப்பெற்றுக் கூட்டம் நிறைவெய்தியது.

௨

# காந்தியக் கலகம்.

மகாத்மாவென்று மகுடம் புனைந்த காந்தியார் பொருளற்ற சொற்களாற் புகழப்படுகிறார். அவர் தலையெடுக்க காலமுதல் உலகிற் கலகம் பரவியதைத் தவிர சமாதானம் எதும் நிலவியதே யில்லை. பிடிவாத குணமும், சண்டித்தனமான சாதனையும், வேத விரோதமான செயலும் போதனையும், தன்கொள்கையே சரியென் றுந் தருக்குற்றுடையவர் அவர்.

பெரியவருக்குச் சிறியவரும், அரசனுக்குக் குடிகளும் கீழ்ப் படியவேண்டுமென்ற மரியாதைக் கிரமங்கள் இவரது சமரசஞான போதனையால் பறந்தொழிந்தன. பட்டமறுப்பு, பதவி மறுப்பு, சட்டமறுப்பு இயக்கங்களைச் செய்து அரசியலாருக்கும் குடிகளுக்கும் பிளவை யுண்டுபண்ணித் தான் தன் சகாக்களுடன் பன்முறை சிறைக்கோட்டம் புக்கனர்.

பெற்றோருக்குமக்களும், பெரியோருக்குச்சிறியோரும், நாயகனுக்குநாயகியும், குருவுக்குச்சீடரும், எஜமானனுக்கு வேலைக்காரரும், அரசருக்குக் குடிகளும், தெய்வத்துக்கு அனைவரும் கீழ்ப் படிந்து வணக்கங் காட்டிக் கட்டளைக் கடங்கி நடத்தல்வேண்டுமென்பதும், சாதி சமய வரம்பு கடத்தலாகாதென்பதும் உலக இயற்கை.

காந்தியார் கைக்கொண்ட காந்தியம் அவைகளுக்கு முற்றும் முரணாகும். பெற்றதாய் தந்தையர் என்ன சொன்னபோதிலும் விதவைகளையே மணக்கவேண்டுமென்று கல்லூரிமாணவர்கட்கும் பிறருக்கும் போதனைசெய்துகெடுத்தும்; அவரவர்க்கும்சமத்துவம், சுதந்திரம் உண்டென்றபோதனையால் பெரியவர் - சிறியவர், நாயகர்- நாயகியர், குரு - சீடர், எஜமானர் - வேலைக்காரர், அரசர் - குடிகள் என்பவர்களுக்கு உள்ள மரியாதைக் கிரமத்தை ஒழித்தும்; ஆலயத்தில் தெய்வமில்லை யென்ற போதனையால் தெய்வநம்பிக்கை, தேவாலய நம்பிக்கைகளைக் குறைத்தும்; சமரசஞானம் பேசிச்சாதி சமய வரம்புகளை உடைத்தும் தீமைகள்புரிந்தது காந்தியமே.

சட்டமறுப்பு இயக்கம் செய்த காந்தியாரே விதவை மணம், கலப்புமணம், கருப்பத்தடை மசோதா, சாரதா மசோதா, தீண்டாமை ஒழிப்பு மசோதா, ஆலயநுழைவு மசோதா ஆகிய சட்டங்கள் செய்யத் தலையாட்டுதல் தலையாய செயலாகுமா? சட்டமறுப்பு இயக்கத்தைப் பரப்பிவிட்டுச் சட்டத்தை ஆதரிப்பது ஒரு நிலையற்ற செயலல்லவா? இவர் கொள்கைப்படி சட்டத்தை மீறுவதும் மீறி

விட்டுச் சட்டத்துக்கு அடங்குவதும் முட்டாள்தனமாகாதா? பட்டமறுப்பு இயக்கம் செய்த இவரை மகாத்மாவெனக் குறிக்க வேண்டுமென்று சட்டசபையில் பட்டமளிப்பதும் இவர் பெற்று மகிழ்வதும் பண்பாகுமா?

அரசாங்க உத்தியோகப் பதவி மறுப்பு ஆற்றிய காங்கிரஸ் தானே அதிகார பதவிகளைக் கைப்பற்றிக்கொண்டதும், வரிகொடா இயக்கமும் சட்டமறுப்பும் செய்தவர்களே புதிய புதிய வரிப் பளுவையும், கட்டாய இந்திப்பளுவையும் மக்கள்மேற் சுமத்திச் சட்டம் செய்து மக்களைத் துன்புறுத்துவது விரோதமன்றோ?

ஆங்கில அரசாங்கத்தார் ஆளுகையைக் கைக்கொண்ட பிறகு இந்நாட்டிற் கொடியேற்றவும், தங்கள் மொழியை மெதுவாக நுழைக்கவும் ஆயினர். காந்தீயமோ ஆட்சி கிடைக்கு முன்னரே கிடைத்துவிட்டதாக மனோராஜ்ஜியம் செய்துகொண்டு சுயஆட்சிக் கொடிகள் பறக்கவிடவும், தங்கள் மனோராஜ்ஜியத்துக்குப் பொதுப் பாஷை இந்தியாக இருக்கவேண்டுமென்று கட்டாய இந்திச்சட்டம் போடவுஞ் செய்கிறது; அரசியற் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்களை இந்தி யெதிர்ப்புச் செய்யக்கூடாதென்று கட்டளையிட்டுவிட்டுத் தமிழ்ப்பண்டிதர்கள் இந்தியை எதிர்க்கவில்லையே என்று விருது கூறுகிறது. இன்னோரன்ன பலவற்றையும் முன்னுக்குப்பின் முரணாக ஆற்றச்செய்வதுதான் காந்தீயக்கொள்கை. இக்கொள்கையால் ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் நீளக்கலகமும் கஷ்ட நஷ்டமுமே விளைந்தது: விளைகின்றது.

அரசியற் பதவிகளைக் காந்திதாசர்கள் கைக்கொண்ட பிறகு காந்தியார் தீவிரமாகச் சாதி சமய வொழுக்கங்களைக் கெடுக்கத் தலைப்பட்டு அவரவர் நிலையில் விரோத பாவனையின்றி மரியாதையாக வாழ்ந்து வந்த மக்களுக்குள் கலகம் மூட்டி எல்லாம் அபேதமாக்கிக் காந்தீயமாக்கப் பார்க்கிறார். இவர் சுய ஆட்சிப் பேராசை காட்டி எல்லோரையும் ஏமாற்றித் தன்வயப்படுத்துபவர். இந்து முஸ்லீம் ஒற்றுமையும், சாதிசமய வேற்றுமையின்மையும் ஏற்பட்டால்தான் ஆட்சிகிடைக்குமென்கிறார். இந்து முஸ்லீம் ஒற்றுமையென்றால் எல்லோரும் இந்து ஆவதா? அல்லது முஸ்லீம் ஆவதா? சாதிசமய ஒற்றுமையென்றால் மேற்சாதியாருந் தலையாய சமயத்தினருங் கீழானசாதி சமயங்களிற் சேர்ந்தொழுகுவதா? அல்லது கீழான சாதி சமயத்தவர் திருந்தாத நிலையிலேயே மேலான சாதி சமயங்களில் ஏறிக்கொள்வதா? என்னே காந்தீயம். இவைகள் ஒரு காலத்தும் அபேதமாகவேயாகா. இவர் சுய ஆட்சிவாங்கித் தருவேனென்பது எல்லோரும் ஒன்று சேர்ந்து இமயமலையைத்



தூக்கி என் தலைமீது வைத்தால் எந்தவிடத்தில் வேண்டுமானாலும் கொண்டுவந்து இறக்குவேன் என்பது போன்றதே.

அரசியற் கலகமே புரிந்துவந்த காந்தியார் வட்டமேஜை மகாநாட்டில் அம்பேத்கார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டுத் தங்கொள்கை முறியடிக்கப்பட்டதிலிருந்து வகுப்புவாதத்தை யொழிக்க அரும்பாடுபடுகிறார். அது கைகூடாது. வேதாதிகளை நம்பாத இவர் சொல்வதெல்லாம் வேதமா? இவர் சொல்லும் வெற்றுரைகளை யெல்லாம் கேட்டுத்தான் ஆகவேண்டுமென்பது சநாதன தர்மிகளின் தலைவிதியா?

ஆலய நிந்தகராய்ச் சாதிசமய மாறுபட்டவராய் உள்ள இவர் தேவாலயங்களிடத்தும், வருணாசிரம தர்மங்களிடத்தும் பொறாமைப்பேய் பிடித்து ஆலய விஷயத்திலும் சாதிசமய விஷயத்திலும் தான் கைக்கொண்டுள்ள 'ஹரிஜன்' என்னும் பத்திரிகைமூலமும் தனது தாசர்கள் மூலமும் கலாம்விளைத்து வருகிறார்.

ஆங்கிலேயரிடத்தும், சுபாஷ்சந்திரபோஸ் பட்டாபியோடு போட்டிபோட்டு வெற்றிபெற்றவிடத்தும் பொறாமை அடைவதும் பட்டாபிதோல்விக்கும், தன்மகன் அப்துல்லாகாந்தியானமைக்கும் வருந்துவதும் தான் இவரது சமரசஞானம் போலும்.

மாப்பிள்ளைமார் கலகம், இந்து முஸ்லீம் கலகம் ஆகியவை நேர்ந்தகாலங்களில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்தவரும், பெண்டு பிள்ளைகளிடமெல்லாம் அணிபணிகளைக் கேட்டுக் கைப்பற்றியவரும், சொந்தமில்லாத அணிபணிகளைச் சுமக்காமல் கழற்றித் தரும்படி கேட்கப்பட்ட ஒருபெண்மணியால் எனக்குச் சொந்தமில்லாததை நான் எப்படித் தரமுடியுமெனப் புத்தி புகட்டப்பட்டவரும், வடநாட்டிலும் தென்னாட்டிலும் ஏராளமான பணமுடிப்புகளும் நகைகளும் பிறவும் கைப்பற்றினவரும், அப்படிச் சேகரித்த பெருந்தொகைப் பொருள்களை இன்னின்ன காலங்களில் இன்னின்ன வகைகளில் இன்னின்னவிதமாகச் செலவழிக்கப்பட்டது என வரவுசெலவு கணக்குக் காட்டாதவரும், தென்னாட்டில் பணம் பறிக்கத்தவிர எந்த ஏழைகளுக்கும் ஒருகாசும் அதிலொட்டிய தாசும் உதவாதவரும், சின்னஞ் சிறுபிள்ளைகள் பிணக்கைப்போல உண்ணாவிரதங் கொள்பவரும், அக்காலங்களில் ஆங்கில வைத்தியரால் தாதுப்பரீக்ஷை செய்யப்படுபவரும், பழச்சாறும் ஆட்டுப்பா

லும் கடலையும் பண்புடன் அருந்திப் பாரணம் பண்ணுபவரும், தமிழில் பிள்ளைத்தமிழும், புராணமும் பாடப்பெற்றவரும், தமிழருமையறியாதவரும், சாதி சமய சமரசத்தாலும் கைராட்டினத்தாலும் கதராடையாலும் சுயராச்சியம் கைகூடுமென்பவரும், எழுதலைப் பாம்பணையிற் படுத்துத் தேவிபாதம்வருட உந்திபூத்துக் கலிகால விண்டுவாகப் படம்பிடிக்கப்பட்டவரும், கர்த்தற்கடவுள் தானேயாகி அஹிம்சை போதிக்கின்றமையால் பசுங்கன்று வருந்தப்பொறுது விஷஊசி ஏற்றிக்கொல்வித்தவரும், இலக்குமிநாராயணன் என்னும் பெயருக்கு மாறாக தரித்திரநாராயணன் என வழங்கியவரும், தமது ஆச்சிரமத்தில்ஒழுக்கங்கெட்ட ஒருத்திக்கு இடந்தந்து வீறைச்சிரமங் கொண்டவரும், பத்திரிகைகளிலெல்லாம் தன்னையுந்தன்கொள்கைகளையும் பரப்பிச்சமரசப்போக்கிலேகலவரம் விளைப்பவரும், கோயில்களைக்குச்சுக்காரிகள் வீடென்று கூசாது மொழிந்தவருமான உத்தமோத்தமராகிய காந்தியார் தந் தமராகிய ஹரிசனர்களைக் கோயிலுக்குள் நுழைக்க வேண்டுமென்பது யாது காரணத்தாலோ? விபசாரி வீடானாலும் விவஸ்தையின்றி எல்லோரும் நுழையலாமா? நீச்சுநிலையில்லாமல் அநாகரிகமாய் நுழைந்தால் உதைபட்டு, மிதிபட்டு, அடிபட்டுத் தெறிபட்டுக் குடுமியறுபட்டு ஓடநேருமென்பதறியாரோ?

போதும் போதும் இவரால்வந்த தயஆட்சி என்னும் அந்தரசொர்க்கம். நீறு கோபி திருநாமம் நெற்றிக்கணியா இவர் இக்கலிகாலத்தில் நாரதர் கௌசிகர் ஆகிய மாமுனிகளாக, நாரணராக, மஹாத்மாவாக விளங்குதல் விந்தையினும் விந்தையே.

இப்போது காந்தியத்தால் தூண்டப்படுகிற ஆலய நுழைவுக் கலகத்தை அடக்க வழக்குத் தொடரக் கூடாதென்று ஆலயசாச் சட்டமும் பிறப்பிவித்த நிலையில் இச்சச்சரவைத் தீர்த்துக்கொள்ள வழியொன்றுமின்றிப் பொதுமக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு மண்டையுடைத்துக்கொண்டுகலகம் செய்துகொள்ளுவதைத் தவிர வேறென்னவுண்டு.

“உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.”

என்னும் திருக்குறளைக் காந்தியாருக்கு அர்ப்பணஞ் செய்வோம்.

**காந்தீயக் கலகம் ஒழிந்தால்தான் உலகத்தில் சாந்தி நிலவும்.**

**ஆங்கில ஆட்சி ஓங்கி வாழ்க!**

---



உருதுவின் யாப்பியல் பாரசீகத்தைத் தழுவியது. இந்தியின் யாப்பியல் அதனோடு மிக மாறுபட்டது. 22—1—39 இந்துவில் The oldest Urdu Poem என்ற தலைப்பில் “It is written in a language which contains seventy per cent Hindi words and yet it is Urdu - the Urdu of those days - for it contains so many Persian words and follows the rules of Persian prosody, which is a clear departure from the Hindi method of writing poetry” என்று வருவது காண்க. இந்தியும் உருதுவும் இலக்கணப்பகுதியில் வித்தியாசப்படும்போது அவை சம்மேளிக்குமென்பது கனவே. காங்கிரசார் இந்துஸ்தானிக்கு ஒரு அகராதியைக் கற்பித்ததுபோல் ஒரு இலக்கணத்தையுங் கற்பிக்கவேண்டும். அது எங்கிருந்து எப்படித் திருடப்படுமோ? அந்தத் தலைப்பே “But, alas, their noble intentions in evolving Urdu have been foiled by the present-day Persianised Urdu on the one hand and Sanskritised Hindi on the other, which, on the contrary, have created a seemingly unbridgable gulf between the two sister communities” என்று விசனித்து இந்தியும் உருதுவும் சம்மேளிக்கமுடியாதென்பதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் காக்கிநாடாவில் நடந்த ஆந்திர இந்திப் பிரசாரகமகாநாட்டில் எஸ். வி. சிவராமசர்மா என்னும் இந்தி ஆசிரியர் “People in the south have to take their due place in the building of the national language. Claims are being put forward from different corners in support of Urdu, Sanskrit and Hindi separately, without any idea of evolving a common vocabulary grammar, terminology and script. Andhras are best fitted for this purpose as their language includes words of Sanskrit, and many other languages” என்கிறார். 30—12—38 மதராஸ் மெயில் பார்க்க. தெலுங்கு பலமொழிக் கலவை. அக்கலவைமொழியிற் பெருமிதங்கொள்பவர் தெலுங்கர். உண்மையிற் பெருமையுடையது தனிமொழியா? கலவைமொழியா? கலவைமொழியாயின் தனிமொழியாகிய சம்ஸ்கிருதம் பெருமைதுன்றியதாய்முடி

யும். முடியவே மற்றொரு தனிமொழியாகிய தமிழின் பெருமையும் அறியவாராது. அது சொல்லாமலே விளங்கும். கலவைமொழிப் பெருமையாற் றம்மை மறந்த அத்தெலுங்கர் இந்துஸ்தானி மொழியை உண்டாக்குஞ் சக்தி தமக்கு அதிகம் உண்டென்கிறார். தெலுங்கு புதுமொழிதானாயிற்று; பொதுமொழியாகவில்லை. அப்படியே இந்துஸ்தானி யொன்று உண்டானாலும் அது புதுமொழியாகுமே தவிரப் பொதுமொழியாகமாட்டாது. தெலுங்கர் அதனை அறிக.

இந்நாட்டிற் பழமொழிகளும் உண்டு, புதுமொழிகளும் உண்டு. தமிழுஞ் சம்ஸ்கிருதமும் பழமொழிகள். தெய்வசம்பந்தமும் உடையன அவை. தெலுங்கு, மலையாளம், இந்தி முதலியன புதுமொழிகள். தமிழின் சிதைவு சம்ஸ்கிருத சம்பந்தத்துடன் தெலுங்கும் மலையாளமு மாயிற்று. கொச்சைத் தமிழே அச்சத்தெலுங்கென்பாரும் உளர். அச்சம் தெலுங்குமொழியிற் சுத்தமென்னும் பொருளது. அம்மொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்களையும் சம்ஸ்கிருதச் சொற்களையும் நீக்கிவிட்டால் அம்மொழிகளுக்குச் சீவனங் கிடையாது. ஒருக்கால் அவை சீவித்தாலும் அம்மொழிக்காரருக்கு அவமானமே வருவதாகும். அவ்வளவு நாகரிகமற்றன அவை. அவை உண்டாகுமுன் மலைநாடுந் தெலுங்குநாடுந் தமிழ் நாடாகவேயிருந்தன. புதுமொழிகள் உண்டாக உண்டாக நாடுகள் பிரியும். மக்களொற்றுமை குலையும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மொழியுண்டாகி ஒருவன் பேசுவது மற்றவனுக்கு விளங்காமல் எல்லாமக்களும் ஒற்றுமையற்று நாசமாவார். இதற்கிசைந்த ஒரு செய்தியைப் பைபில் ஆதி 11-ஆம் அத்தியாயத்திற் காண்க. ஆகவே புதுமொழிகளை உண்டாக்கவேண்டாம். அது நியாயமாகாது. காந்தியும் காங்கிரசும் அதனை ஓர்க. நாடுசேர்ப்படவேண்டுமானால் நாகரிகமற்ற மொழிகள் ஒழியவேண்டும். காந்தி நினைக்கும் இந்துஸ்தானியாதி புதுமொழிகள் தோன்றுதல் கூடாது. அறிஞர் அதை விரைந்து தடுக்க வேண்டும்.

கல்வி மனிதனியல். ஒருவன் எந்த அளவுக்குப் படிக்கவிரும்புகிறானோ அந்த அளவுக்கு அவன் வசதிபெறவேண்டும். அவ்வசதியை உண்டாக்கிக் கொடுப்பது அரசு. எந்த அரசும் குறிப்



பிட்ட அளவில் ஒருவன் படிப்பைத்தடுத்துவைத்தல் தவறு. வேறு பல காரணங்களைக் கருதி அது தடுக்கலாம். ஆயினும் அத்தடை அவ்வரசின் நோக்கமாயிருத்தல் கூடாது. சென்னை மாகாணத்தார் இந்தியை எழுதப்படிக்க மாத்திரங் கற்றுக்கொண்டாற்போது மென்று அம்மாகாணத்தரசு சொல்லுகின்றது. அவ்வறிவு ஆங்கிலத்தில் Working knowledge எனப்படும். கல்வி மந்திரியாகிய ஸி. ஜே. வார்க்கியென்பவர் 2-3-39 இந்துவில் "All that they wanted was that the children of Madura and Trichinopoly should be able to talk with northerners and to have easy communication so that the future ministers coming from the different parts of our country might be able to speak in a language of our own with self-respect and so that they could understand the language. That was what was meant by a working knowledge of Hindustani" என்று அவ்வறிவை விளக்குகிறார். அது சென்னையரசின் நோக்கமாக இருக்கமுடியாது. சென்னை மாகாண மக்களை ஏமாற்றுஞ் சொல்லே அது. பின்னுள்ள மக்கள் இந்தியைப் பூரணமாகக்கற்கவேண்டுமென்ற எண்ணத்திற்கு அவ்விளக்கம் விதையேயாகும். ஆரம்பத்தில் ஆங்கில அரசை இக்கண்டத்தில் நடத்தக் குமாஸ்தாக்கள் வேண்டப்பட்டனர். குறைந்த சம்பளக் குமாஸ்தாக்கள் போதும். அச்சம்பளத்துக்கு இங்கிலாந்திலிருந்து யாரும் வரமாட்டார். பரத கண்டத்து மக்களுக்குங் கொஞ்ச ஆங்கில மொழியறிவுகொடுத்துவிட்டால் அவருக்குள்ளேயே அக்குமாஸ்தாக்கள் கிடைக்கக்கூடும். ஆங்கிலேயர் பரதகண்டத்தார்க்கு ஆங்கிலங் கற்பிக்கத் தொடங்கியபோது கொண்ட நோக்கம் அதுவே. ஆனால் இப்போது இந்நாட்டில் ஆங்கிலமொழி எப்படியிருக்கிறது? இங்குள்ள எல்லாமொழிகளுக்கும் அது அரசாகமிளிர்கின்றது. அப்படியே இந்திக்கல்வியுங் கொஞ்சமிருந்தாற் போதுமென்று ஆரம்பத்திற் சொல்லப்படும். அப்பால் அதனாட்சியும் இம்மாகாணத்தில் தப்பாது. இம்மாகாண மொழிகள் ஆங்கிலத்தால் ஒளியிழப்பதுபோல் இந்தியாலும் ஒளியிழக்கவே செய்யும்.

தமிழர் ஆங்கிலத்திலும் இந்துஸ்தானியிலுஞ் சிறந்த கவிகளாகவேண்டுமென்ற எண்ணம் தம்மவர்க்கில்லையென்றும் அந்த

மந்திரி அந்த இந்துவிற் சொல்கிறார். "They did not want to raise poets in English and Hindustani from Tamil Nad" என்பது அது. எத்தனையோ தமிழர் ஆங்கிலம் படித்து அம்மொழியிற் சிறந்த நூலாசிரியராக இருந்திருக்கின்றனர். அப்படியே அவர் இந்தியைப்படித்தால் தாமாகவே கவிகளாகலாம். காங்கிரசாருக்கு அந்நோக்கம் இருப்பதும் இல்லாதொழிவதும் ஒன்றே. அவர்க்கு அந்நோக்கமில்லை யென்பது ஒரு சூழ்ச்சி. இந்தியிற் கவியாகுந் தமிழனை அவர் தண்டிப்பாரா? அதற்கு எந்தக் கிரிமினல் சட்டம் பிரயோகிக்கப்படும்? சென்னை அசெம்பிளித் தலைவராகிய புலூசு சாம்பமூர்த்தி ஒவ்வொரு மாகாணத்து மொழியிலும் உள்ள இலக்கியங்கள் இந்தியிற் பெயர்க்கப்படவேண்டு மென்கிறார். Mr. Sambamurthi said that the great cultural heredity should be infused into Hindi which should be enriched in all aspects."………He "said that Andhra historical dramas should be written in Hindi. He announced that a prize should be awarded to the best writer of a Hindi drama relating to Andhra history" என்ற 30—12—38 மதராஸ் மெயில் காண்க. அங்ஙனம் பெயர்க்கவல்ல மற்றமொழிக்காரன் இந்தியிற் கவிஞனுமாகவும் இருக்கலாமன்றோ? வார்க்கி அவனைத் தண்டிக்க முதலில் ஏற்பாடு செய்க.

இந்து முசிலீம் ஒற்றுமையை உண்டாக்கவல்ல மொழியே பாரதகண்டத்திற் பொதுமொழியாக வல்லது; அது தனக்குச் சொந்தமல்லாதாரும் அங்கீகரிக்கத்தக்கதாயிருக்கவேண்டும் என்கிறார் அம்மந்திரி. இந்துஸ்தானியைக் குறிப்பதாகும் அது. A common language "must be such that it could not only serve the purpose of Hindu - Muslim unity but also serve one which could be easily adopted by the rest of India which did not speak that language" என்று அவர் சொன்னதை அந்த இந்துவிற் காண்க. சாத்தன் ஒரு இந்து. இசுமாயில் ஒரு முசிலீம். இருவருந் தமிழர்நேசர். அவர் தெலுங்கு நாட்டிற்குப் போகின்றனர். ஒரு இபுராஹீம் எதிர்ப்படுகிறான். அவன் ஒரு தெலுங்க முசிலீம். அவனுக்கும் சாத்தனுக்கும்



சண்டை உண்டாகிறது. இசுமாயில் சாத்தனுடன் சேர்வனா? இபுராகிமுடன் சேர்ந்துகொள்வனா? சாத்தனைவிட்டு இபுராகிமுடன்றான் சேர்வான் அவன். அச்சமயத்தில் தமிழ்மொழி இசுமாயிலையும் சாத்தனையும் ஒன்றுபடுத்தாது. இசுலாமிய மதமே அவ்விரு மொழி முசிலீம்களையும் ஒன்றுபடுத்திவிடும். இவ்வுண்மையை எங்கும் என்றும் எவரும் நேரிற் காணலாம். தமிழுக்குள்ள யோக்கியதையே இந்துஸ்தானிக்குமுண்டு. இந்துஸ்தானி ஒரு மொழி முசிலீமையும் இன்னொருமொழி முசிலீமையும் ஒன்றுபடுத்தவல்லதா? ஒருமொழி இந்துவையும் இன்னொருமொழி இந்துவையும் கூட்டிவைக்கவல்லதா? ஒருமொழி முசிலீமையும் இன்னொருமொழி இந்துவையும் சேர்த்துவைக்கவல்லதா? ஒன்றையும் அது செய்யமாட்டாது. ஒருமொழி முசிலீமையும் இன்னொரு மொழி முசிலீமையும் இந்துஸ்தானியிலுள்ள இசுலாமிய சமயக் கலைகளே கூட்டிவைக்கும். அச்சாமர்த்தியம் அம்மொழியைச் சாராது. வடநாட்டில் இந்துஸ்தானியைப் பேசும் இந்து முசில்மான்கள் அடிக்கடி தம்முட் சண்டையிட்டுக்கொள்வது யார்க்குந் தெரியும்.

மாகாண அரசை நடத்த மாகாண மொழிகளும் சர்வமாகாண அரசையும் தேச அரசையும் நடத்த இந்தியும் சர்வதேச அரசை நடத்த ஆங்கிலமும் அவசியம் என்கிறார் காந்தி. Mr. Gandhi foresaw the possibility of provincial languages retaining their local use and Hindi becoming the inter-provincial and national language, while English would maintain its international position" என்பதை 20-4-35 இந்துவிற் காண்க. பாரதகண்டத்துக்குத் தேசபாஷை கிடையாது. இந்தி இரண்டொரு மாகாணங்களுக்கே சொந்தம். ஆகையால் அது இந்துஸ்தானி முதலியவெல்லாம் மாகாண மொழிகளே. அவை மற்றமாகாணங்களுக்கு அந்நியம். ஆங்கிலம் பயில்வது பாரதகண்டத்துக்கு அவமானமெனச் சொல்லப்படுகிறது. அப்படியே அயல் மாகாணத்துமொழிகளைக் கட்டாயத்தாற் பயில்வதும் அவமானமாகும். இந்தி முதலியவற்றை மற்ற மாகாணங்கள் இனித்தான் பயிலவேண்டும். ஆங்கிலம் முன்னமேயே பாரதகண்டமெங்கும் பரவிவிட்டது. அம்மொழிப்பயிற்சி இந்து முசிலீம்களுக்குள் ஒற்றுமையை உண்டுபண்ணாவிட்டாலும் வேற்றுமையை உண்டுபண்ணாது. சர்வதேச பாஷையென ஒன்றில்லை. ஆங்கிலத்துக்கு அப்பெருமை வந்தது. அது பாரதகண்டத்துக்குத் தேச பாஷையாகவும் ஏனிருத்தல் கூடாது? நன்றாக இருக்கலாம். இக்கண்டத்தில் மாகாண அரசு மாகாண மொழிகளிலும் சர்வமாகாண தேச சர்வதேச அரசு ஆங்கிலத்திலும் நடைபெறல் குற்றமாகாது. பாரதமக்களுக்கு அதனாற் பல தொல்லைகள் நீங்கும். பல நலன்களும் பெருகும்.

# சிவநேசன்.

ஆலயநுழைவுச் செய்திகள்:— துவாதசாந்தப் பெருவெளியாக விளங்கும் மதுரைமூதூரில் ஸ்ரீமீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலில் யாருமறியாதபடி தீண்டத்தகாதார் சிலரைக் காந்தீயத்தார் அழைத்துச்சென்று உள் நுழைவித்தனர்; சிலதர்மகர்த்தரும் பட்டரும் உடந்தையாயிருந்தனர். அவர்கட்கு மரியாதைசெய்த பட்டரொருவர் துர்க்காதேவி சந்நிதியில் இரத்தங்கக்கி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுச் செத்தொழிந்துபட்டார். இந்நுழைவைப் பின்பற்றி தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் காந்தீயத்தார் ஒருசிலரை நுழைத்துப்போய்வந்தனர். இந்நிகழ்ச்சிகள் எங்கோ இருந்துவந்த இனந்தெரியாத பேர்வழிகளை இயந்திரவூர்திகளில் ஏற்றிக்கொண்டுவந்து உள்ளே நுழைவித்து வெளியேற்றி விரைவாக ஓட்டிவிட்டனவேயாகும். இவ்வளவில் காந்தீயம் தழுவும் பத்திரிகைகளில் பல கோயில்கள் பஞ்சமர்களுக்குத் திறந்துவிடப்பட்டனவென்றும், ஆயிரக்கணக்கான பஞ்சமர்கள் ஆலயத் துட்புகுந்தனர் என்றும் ஆரவாரம் செய்வது வெறும் புரட்டேயாகும். பட்டர் செத்தொழிந்த செய்திகளைப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தாத அபாரபக்ஷத்தைக் குறிக்கவே.

இத்தருணத்தில் ஆலயநுழைவைப் பிரசாரஞ்செய்து வெற்றிபெற வந்த இராமேசுவரிநேரு திருவண்ணாமலையில் உண்மை மகாத்மாவாக விளங்கும் ஸ்ரீ ரமணமகாரிஷியவர்கள்பால் தென்னாட்டில் தீண்டாதார் ஆலயநுழைவுசெய்ததுபற்றி சுவாமிகளின் திருவுள்ளக்கருத்தை வினவியகாலை "எல்லாவற்றிற்கும் பின்னால் தெய்வசக்தியொன்றிருக்கிறது; அதுதான் எல்லாவற்றையும் நடத்திச் செல்லும்." என்று திருவாய் மலர்ந்தனர். அதையும்,

"ஈசன் பலவீனன் என்றக்கால் ஆலயத்து
மோசம் வருமென்று மொழியலாம் — ஈசன்
ஆக்குவதுந் தானும் அழிப்பதுவுந் தானெனில்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து."

என்று தருமையாதீனத்தார் கூறிய உறுதியையுங்கொண்டு ஆலயங்களும் ஆலய வரன்முறைகளும் ஒருகாலும் அழிவுறாது நிலைபெறும் எனத் துணியலாம்.

திருச்செங்கோடு ஸ்ரீகைலாசநாதர் சந்நிதியில் கூடிய மாபெருங் கூட்டத்தில் ஏகமனதாய் தீண்டாதார் ஆலயப்பிரவேச கண்டனமும், தேவஸ்தான தர்மகர்த்தர்களுக்கு எச்சரிக்கையும் செய்து யாரும் துராகிருதமாய்ப் பிரவேசித்தால் தக்க தண்டப்பிரயோகத்துக்கு வேண்டிய வசதிகளும் திட்டம் செய்யப்பெற்றன. மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும், செட்டிமார் நாடுகளிலும், தஞ்சைஜில்லாவிலும், திருவையாறு' கும்பகோணம், திருவாரூர், சிதம்பரம், காஞ்சீபுரம் முதலான திருத்தலங்களிலும் கண்டனக்கூட்டங்கள் கூடித் தீர்மானங்கள் செய்யப்பெற்றன. வடநாட்டிற் பிறந்த காந்தீயக் கொள்கையாகிய ஆலயநுழைவும் இந்திமொழியும் அங்கு இடம்பெறாதநிலையில் இங்கு தாண்டவமாடவந்தது இங்குள்ளவர்களை [illegible]தோணகிரி என்றெண்ணியே போலும்.

---

இ[illegible] சிவநேசன் அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி
ராம. கு[illegible] இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி
வெளியிடப்பெற்றது.